...பாலால்—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனுபஜார் ரோட், சென்னை.

12

No. M. 916.

॥ ஸ்ரீ: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 18] விபவஹு-புரட்டாசிமீ [ஸஞ்சிகை 12



பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யா.

வருஷ சந்தா ரூ. 3.] September, *1928.* [ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்.

'வேதாந்த தீபிகை'யின் 18-வது ஸம்புடம் இந்த சஞ்சிகையுடன் பூர்த்தியடைகின்றது. பல சந்தாதாரர்களுக்கு பழைய சந்தா பாக்கியைப்பற்றிப் பல ஸமயங்களில் பல ப்ரகாரம் விஜ்ஞாபித்துக்கொண்டும் இன்னும் அந்த ஸ்வாமிகள் சந்தாவை அனுப்பத் திருவுள்ளம் பற்றாதது சோகிக்கக்கூடியதாக விருக்கிறது. சந்தாவை முன்னதாக அனுப்பவேண்டுமென்ற வ்யவஸ்தையிருந்தும் வருஷ பூர்த்தியடைந்த பின்னர்கூட, அதை அனுப்பத் திருவுள்ளம் பற்றாவிட்டால் ஸபை நிர்வாகம் எவ்விதம் ஸாத்யமென்பதை ஸ்வாமிகள் சிறிது சிந்திப்பார்களானால் இவ்வளவு ச்ரமமேற்படாது. சந்தாதாரர்கள் எல்லோரும் பழைய பாக்கியிருக்குமானால் அதையும் சேர்த்து புதிய வருஷ சந்தாவை உடனே அனுப்பவேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

கார்யதர்சி, ஸ்ரீ வை. ஸி. ஸபை,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

## ஸ்ரீ வை. ஸி. ஸபை சந்தா வரவு.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஸ்ரீ. உப. எஸ். திருவேங்கடாச்சார், சிந்தாத்ரிபேட்டை | 3 | 0 | 0 |
| ,, சுந்தரராஜ அய்யங்கார், சிந்தாத்ரிபேட்டை | 3 | 0 | 0 |
| ,, சக்ரவர்த்தி அய்யங்கார், ஷில்லாங் | 3 | 0 | 0 |
| ,, என். ராகவாச்சாரியார், திருவல்லிக்கேணி | 1 | 0 | 0 |
| ,, எ. வி. சேஷாச்சாரியார், வில்லிவாக்கம் | 3 | 0 | 0 |
| ,, பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், எழும்பூர் | 3 | 0 | 0 |
| ,, ஜோஸ்யம் வெங்கடாசலம் | 3 | 0 | 0 |
| ,, எ. ரங்கஸாமி ஸரஸ்வதி, திருவல்லிக்கேணி | 5 | 0 | 0 |
| ,, டி. வி. ஸ்ரீநிவாஸாசாரியார், கோயமுத்தூர் | 3 | 0 | 0 |
| ,, என். ஸ்ரீநிவாஸாசாரியார், திருவல்லிக்கேணி | 3 | 0 | 0 |
| ,, ஸி. எஸ். வெங்கடாசாரியார், புரசைவாக்கம் | 3 | 0 | 0 |
| ,, வி. பாஷ்யமய்யங்கார், வேலூர் | 5 | 0 | 0 |
| ,, கே. ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி | 3 | 0 | 0 |
| ,, திவான்பகதூர் டி. ரங்காச்சாரியார், வேப்பேரி | 5 | 0 | 0 |
| ,, ராவ்பகதூர் எஸ். வரதாச்சாரியார், மைலாப்பூர் | 5 | 0 | 0 |
| ,, டாக்டர் எஸ் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் மைலாப்பூர் | 5 | 0 | 0 |
| ,, ராவ்பகதூர் என். கோபாலஸ்வாமி அய்யங்கார், அனந்தபூர் | 5 | 0 | 0 |
| ,, ராவ்பகதூர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியர் ஸி. ஐ. இ. பரோடா | 5 | 0 | 0 |
| ,, ஸி. வி. ஜகந்நாதாச்சாரியார், கும்பகோணம் | 3 | 0 | 0 |
| ,, என். கே. வெங்கடரங்க அய்யங்கார், நாகப்பட்டணம் | 3 | 0 | 0 |
| ,, கே. ஸ்ரீநிவாஸராகவன், ஜார்ஜ்டவுன் | 1 | 8 | 0 |
| ,, டி. ராகவ அய்யங்கார் | 3 | 0 | 0 |
| ,, எல். என். வரதாச்சாரியார் | 3 | 0 | 0 |
| ,, வைகுண்டாச்சார், தில்லைஸ்தானம் | 3 | 0 | 0 |
| ,, டி. ஸுந்தராசாரியார், தில்லைஸ்தானம் | 3 | 0 | 0 |
| ,, டி. எல். ராகவாசாரியார், தில்லைஸ்தானம் | 3 | 0 | 0 |
| ,, பார்த்தஸாரதிதாதாசாரியார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |

186788

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. ச்ருதி கீதை—ஸ்ரீ. உ.ப. வித்வாந் தட்டை, வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருச்சி ... ... ... 321
2. ஹிந்து விதவைகள் தலைமயிரை நீக்கவேண்டாமா?—ஸ்ரீ வித்வான் T. S. நடேச சாஸ்திரிகள், "வால்மீகி" மாயவரம் ... ... 330
3. ஒரு உபநிஷத் வாக்யத்தின் அர்த்த விசாரம்—ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்யர் ... ... ... 334
4. சதுந பலம்—ஆர்யமத ஸம்வர்த்தநீ என்னும் பத்ரிகையிலிருந்து ஸங்க்ரஹிக்கப்பட்டது ... ... ... 340
5. புஸ்தக விமர்சம் ... ... ... ... 343
6. கடிதங்கள் ... ... ... ... 346
7. பத்ராதிபரின் குறிப்புகள்:— ... ... ... 349
8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ உ.ப. வாஸுதேவாசார்யர்... ... 177


## வேதாந்த தீபிகை.

வேதாந்த தீபிகை பத்ரிகை ஸம்பந்தமான கடிதங்கள், ஸ்ரீ வாஸுதேவாசார்யர் ஸம்பாதகர் மாம்பலம், சைதாப்பேட்டை போஸ்டு என்னும் விலாஸத்திற்கும்

மற்றக் கடிதங்கள், ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி சென்னை என்னும் விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.


மெடல்கள் பெற்றதும், ரிஜிஸ்டர் நெ. 329, உன்னதமான, எப்பொழுதும்

**C. B. S. ராவின் சர்பத்துகளையே**

உபயோகியுங்கள்.

குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடியது. உண்மையானது. உத்திரவாதமுள்ளது.

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் புட்டி ரூ. 1—8 | லெமன் ,, ,, 1—8 | பாதாமி ரூபா |
| அஞ்சி ,, ,, 1—8 | ரோஜா ,, ,, 1—12 | 1—12. |

குழந்தைகளுக்கான கைகண்ட மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை (100 கொண்ட) புட்டி 1-க்கு 12 அணா.
கஸ்தூரி மாத்திரை ,, ,, 8 அணா.

வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

தயாரிப்பவர்:—

C B. ஸ்ரீனிவாச ராவ், ஆயுர்வேத வைத்யர்,
92, வெங்கடாசல முதலி தெரு, மீர்சாகிப்பேட்டை,
ராயப்பேட்டை, P. O. மதராஸ்.

## விளம்பரம்.

திருப்பூசை கோயில் கந்தாடை உபந்யாஸ ரத்னம்.

## உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர்

ஸ்வாமியால் வெளியிடப்பட்ட க்ரந்தங்களின் விவரம்.

"வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே" என்கிறபடியே ஸ்வயம் வ்யாஸ ரூபியாய்க் கொண்டு வேதங்களைப் பிரித்தும் யாவரும் எளிதிலறிந்து உஜ்ஜீவிக்கும்படியாக 'பாரத: பஞ்சமோவேத:' என்கிறபடியே வெளியிடப்பட்ட ஐந்தாவது வேதமான ஸ்ரீமத் மஹாபாரத ஸாரமான ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ஸ்ரீமத் ராமாநுஜ பாஷ்யமும், அதின் மொழி பெயர்ப்பும், ஸ்ரீமத் மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீமத் கீதார்த்த ஸங்க்ரஹ தீபிகையின் மொழி பெயர்ப்பும், ஸ்ரீமத் வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் அருளிச் செய்த ஸ்ரீமத் பகவத் கீதையின் வெண்பாவும் விசேஷக் குறிப்புடன் சேர்த்து 1-வது அத்யாயம் தெலுங்கிலும், தமிழிலும் 1948ஆம் வெளியிடப்பட் டிருக்கிறது. மேல் அத்யாயங்கள்.

ராயல் 8-பேஜ் ஸயிஸில் 4-பாரம் கொண்ட ஸஞ்சிகை மூலம் தவறாமல் ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதி அடியேனால் பிரசுரம் செய்யப்பட்டுவரும்.

வெளியூரில் வாஸம் செய்யப்பட்ட சந்தாதாரர்களுக்கு மாதம் மாதம் புக்போஸ்டு மூலமாய் 6 மாதத்திய சந்தா ரூ. 1—3—0 வீதம் 1-வது ஸஞ்சிகை V. P. மூலமாகவும் மேல் ஸஞ்சிகைகள் புக்போஸ்டு மூலமாகவும் அனுப்பப்படும். தனி காப்பி விலை அணா 5.

### ஸ்ரீ ராமாயண ஸாரம்.

இதில் அடங்கிய விஷயங்கள்.

(1) இது வேதவேதாந்த ஸித்தாந்தம் என்னும் விஷயம். (2) ஸ்ரீ ராமாயணத்தால் தர்மத்தின் ஸ்வரூபம் சொல்லுகிறது என்கிற விஷயம். (3) மோக்ஷத்திலிச்சை யுடையவனான சேதனனுக்கு ஜகத்காரணத்வாதி விசிஷ்ட வஸ்துவே உபாஸிக்கத் தகுந்தது என்கிற விஷயம். (4) இனி இப்படி மோக்ஷத்திலிச்சையுண்டாகில் அவனுக்கு உபாஸ்யமான ப்ரஹ்மம் எப்படிப்பட்டதா யிருக்கவேணும். (5) அப்படிப்பட்ட ப்ரஹ்ம ப்ராப்திக்கு உபாயம் என்ன? (6) அந்த உபாயத்தால் அடையத் தகுந்த பலம் என்ன? (7) அந்த உபாயம் புருஷகார மில்லாமல் பலிக்குமா? (8) இப்படிப்பட்ட உபாயத்தை யநுஷ்டிக்கும் அதிகாரியின் ஸ்வரூபம் என்ன? (9) சேஷத்வத்தின் பூர்த்தி எப்படியாகில் உண்டு? (10) சேஷத்வத்தின் பராகாஷ்டை எப்போது ஸித்திக்கும்? (11) அர்த்த பஞ்சக ஜ்ஞானம் வேண்டுமோ? வேண்டாவா? (12) இப்படிப்பட்ட வதிகாரிக்கு முக்கியமாய் வேண்டுவதென்ன? (13) இவனுக்கு பகவல்லாபம் யாரால் கிடைக்கும்? (14) இப்படிப்பட்ட அதிகாரி எவ்வளவு காலம் விளம்பிக்க வேணும்? (15) இவ்வதிகாரி சரீரம் விடுமளவும் செய்யவேண்டிய ப்ரகாரமென்ன? (16) இவ்வதிகாரி வாஸம் செய்யவேண்டிய தேசம் எது? (17) இந்த வதிகாரிக்கு சரீரம் விடுமளவும் காலக்ஷேபத்துக்கு உறுப்பானது எது? (18) சாமான்ய தர்மம். (19) விசேஷ தர்மம். (20) காயத்ரியைப்போல் ஸதா ஜபிக்கத்தக்கது.

தெலுங்கு விலை அணா 3. (தமிழ் அச்சிலிருக்கிறது)

### த்ரிமத ஸித்தாந்த ஸாரஸங்க்ரஹம்.

இதில் அடங்கிய விஷயங்கள்.

(1) அத்வைதமத உபந்யாஸம், (2) அதற்கு நம்மிராமாநுஜமுனி அருளிச்செய்யும் பரிகாரம், (3) த்வைத மத உபந்யாஸம், (4) அதற்கு நம்மிராமாநுஜமுனி அருளிச் செய்யும் பரிகாரம், (5) விஸிஷ்டாத்வைத ஸித்தாந்த நிர்ணயம்.

இதன் விலை அணா 2. (தெலுங்கு அச்சிலிருக்கிறது)

கிடைக்குமிடம்.—

"கீதாம்ருதாலயம்"

37, நாட்டுப் பிள்ளையார் கோவில் வீதி, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

"கீதாம்ருதாலயம்" (பிராஞ்சு)

[illegible] யகர் கோவில் வீதி, பெரம்பூர் பாரக்ஸ், குப்பேட்டை, மதராஸ்.

ஸ்ரீ:

॥ [illegible] ॥

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18 ] விபவ ஆு, புரட்டாசி மீ [ஸஞ்சிகை 12

[illegible]

[illegible]

[ ஸ்ரீ பாகவதம், 1-9-23 ]

ஸ்ரீ:

## ச்ருதி கீதை

[ஸ்ரீ. உப. வித்வான் தட்டை, வே. ஸ்ரீ சிவாஸாசார்ய ஸ்வாமி,

ச்ருஸிம்ஹ பட்ட காலனி, திருச்சி.]

இந்தப் பூமண்டலத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபியான ஸ்ரீ க்ருஷ்ண த்வைபாயந மஹர்ஷியினால் லோகோஜ்ஜீவநார்த்தமாகச் செய்தருளப்பட்டிருக்கிற பதினெட்டு புராணங்களுக்குள் ஸாத்விக புராணாக்ரகண்யமான ஸ்ரீபாகவத மஹாபுராணம் ஒன்றே மிக்க சிறப்பு வாய்ந்துள்ளது. ப்ரச்சந்ந பகவத் த்வேஷிகளான சிலர் (போலி வைதிகர்கள்) 'இந்தப் பாகவதம் பதினெட்டுக் குள்ளடங்கியதன்று; தேவீ பாகவதம் தான் புராண ஸங்க்யா பூரக' மென்கிறார்கள். இந்த விஷயம், அந்தத் தேவீ பாகவதத்தையும் இந்த ஸ்ரீ பாகவதத்தையும் ஆமூலாக்ரம் ஒரு தடவையாவது பார்த்து விஷய விசாரம் பண்ணியிருக்கிற வித்வத் சிரோமணிகளின் மனதுக்கு ரஞ்ஜகமாக இராது. அந்த க்ரந்தத்திற்கும் இதற்கும் ப்ரமேய நிரூபண விஷயத்தில் வ்யத்யாஸம் அபரிமிதம். . மஹாமேருவைக் கடுகோடு ஒப்பிடுவது அஜ்ஞர்

கள் மனதுக்குங்கூட ஒவ்வாது. பகவத் குணாம்ருத ரஸ மஹா ஹ்ரதமாக விளங்கிவருகிற இந்த ப்ரபந்த ரத்நமெங்கே, தாமஸதேவதா ப்ராசஸ்த்ய ப்ரதிபாதகமான அந்த க்ரந்தமெங்கே? இந்த ஸ்ரீ பாகவதத்தில் புராணங்களில் அவசியமாகச் சொல்லப்படத் தக்கதான ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி ப்ரளயம் முதலிய விஷய பஞ்சகம் விளக்கமாக உரைக்கப்பட்டிருந்த போதிலும் அவைகளில் இதற்கு நோக்கில்லை; பர தத்வ ஸ்வரூப ஸ்வபாவ விபூதி குண நிரூபணத்திலேயே இதற்கு முக்யமான அபிஸந்தி. இதைத் தசம ஸ்கந்தத்திலும் ஏகாதசத்திலும் காணலாம். மேலும், த்வைபாயந மஹர்ஷியானவர் ஸ்ரீமஹாபாரதம், புராணங்கள், ப்ரஹ்மஸூத்ரம் ஆகிய இவைகளை யோக த்ருஷ்டி பலத்தினால் (உலகத்திலுள்ள தத்வங்களைக் கரதலாமலகமாக அறிந்து) இயற்றியிருந்தும், தமது மனத்துக்கு நைர்ப்பர்ய மில்லாமல் கலக்கமுற்றுத் தத்தளிக்கும் தருணத்தில் தேவர்ஷியான நாரத பகவான் நேரில் தோன்றி வ்யாஸரை நோக்கி 'ஹே ஸத்யவதீ நந்தந! ஏன் கவலையுற்றிருக்கிறீர்? பாரதவ்யபதேசத்தால் நீர் ஆம்நாயார்த்தங்களை வெளியிட்டிருந்த போதிலும், பகவானுடைய நிர்மலமான குணகணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் கீர்த்தியையும் தனித்து ஸத்வோத்தரமான அவஸ்தையில் ஸாத்விக க்ரந்தத்தினால் ப்ரதிபாதியாமல் போனதால் உமது மனத்துக்குக் குழப்பம் வந்திருக்கிறது; பகவத் குணங்களையும் அவனுடைய திவ்ய சேஷ்டிதங்களையும் அவன் கீர்த்தியையும் தனித்து நிரூபணம் செய்யக்கடவீர்' என்று சொல்ல, அந்த நியமநத்தை இந்தப் பாகவத க்ரந்த கரணத்தினால் வ்யாஸர் தலைக்கட்டினார் என்று அபியுக்தர்கள் கூறுகின்றனர். இந்த விஷயம் ஸ்ரீ பாகவதம் ப்ரதம ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்யாயத்திலே ஸ்பஷ்டமாக இருக்கிறது. மற்றைப் புராணங்களைப் போலல்லாது இது முற்றிலும் ரஸமயமாயுள்ளது. அஸாராம்சமே இதிலில்லை. இது நிகம கல்ப வ்ருக்ஷத்தினது அம்ருத மயமான கொட்டையும் தோலு மில்லாத கனி. இந்த க்ரந்தம், ப்ரஹ்ம ஸூத்ரத்தின் அர்த்தத்தை விரித்துரைக்கிற பாஷ்யமென்கிற ரஹஸ்யத்தை தொடக்கத்தி லிருக்கிற ச்லோகத்தின் உபக்ரமத்திலுள்ள 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ப்ரஹ்ம ஸூத்ராபிலாபக சப்தாநுபூர்வியையே காட்டுகிறது. மேலும் இது, காயத்ரியின் அர்த்தத்திற்கு விவரண மென்றும் மஹான்கள் பகர்கின்றனர். இந்த விஷயத்தில் முதல் ச்லோகத்தின் ஈற்றிலுள்ள 'தீமஹி' என்கிற காயத்ரீ மந்த்ர ப்ரத்யபிஜ்ஞாபக பதமே ப்ரமாணம். ஸர்வ வாங்மயங்களைக் காட்டிலும் பகவந் மஹிமையைத் தனித்து ப்ரதிபாதிப்பதினால் மேன்மை பெற்றுப் பர்யாய வேதமாக ஜ்வலிக்கின்ற இந்த க்ரந்தத்தில், ஸாரதரமான கோபிகா கீதை, ப்ரமர கீதை, வேணு கீதை முதலிய க்ரந்த ஸந்தர்ப்பங்களிருந்த போதிலும் ஸர்வோத்தமமானது ச்ருதி கீதையே. இந்த ச்ருதி



கீதையானது தசமஸ்கந்தத்தில் எண்பத்தேழாவது அத்யாயத்தில் அடங்கியது. இந்த அத்யாயத்தில் ஐம்பத்தோரு ச்லோகங்கள் இருக்கின்றன. அவற்றுள் 'ஜயஜய ஜஹ்யஜாம்' என்கிற பதினைந்தாவது ச்லோகம் தொடங்கி, 'த்யுபதய ஏவ தே ந யயு:' என்கிற நாற்பத்திரண்டாவது ச்லோகம் ஈறாக உள்ள இருபத்தெட்டு ச்லோகங்களால் ச்ருதி கீதை ஸாக்ஷாத் சுக ப்ரஹ்மத்தினால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதி கீதையின் அவதரண க்ரமமாவது—'ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத்வதந்தி' 'வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்கிற ச்ருதி வசநங்களால் வேதங்களிலுள்ள எல்லா சப்தங்களும் பரமாத்மாவையே சொல்லுகின்றன, அதாவது முக்ய வ்ருத்தியினால் பரமனையே உணர்த்துகின்றன வென்று சுகர் உபதேசிக்க, அதைச் செவியுற்ற பரீக்ஷித்துக்கு ஒருவித ஸம்சய முண்டாயிற்று. அது என்னவெனில்: 'ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம', 'யதோ வாசோ நிவர்த்தந்தே' இவை முதலிய ச்ருதி வசநங்கள் நேரில் பரப்ரஹ்மத்தை அபிதா வ்ருத்தியினால் உணர்த்துவதாக இருந்த போதிலும், 'அயமாத்மா ப்ரஹ்ம', 'தத்த்வமஸி', 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', இவை முதலிய ச்ருதி வசநங்களில பரமாத்ம சப்தத்தோடு ஸமாநாதிகரணங்களாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற சேதநாசேதந வாசக சப்தங்கள் எவ்வாறு பரமாத்மாவை உணர்த்தும் திறமை வாய்ந்தவைகள்? என்று. இந்த ஸம்சயத்தை நிவர்த்தித்துக்கொள்ள எண்ணங்கொண்ட பரீக்ஷித் மஹாராஜன் சுக ப்ரஹ்மரிஷியை நோக்கி, "ப்ரஹ்மன் ப்ரஹ்மண்யநிர்தேச்யே நிர்குணே குணவ்ருத்தய: | கதம் சரந்தி ச்ருதய: ஸாக்ஷாத் ஸதஸத: பரே ||" [ஹே மஹரிஷியே! குணம், ஜாதி, க்ரியை, இவைகளை ப்ரவ்ருத்தி நிமித்தமாகக் கொண்டு குண க்ரியா ஜாதி விசிஷ்ட வஸ்துக்களைச் சொல்லுகிற சித்சித் பரங்களான வைதிக சப்தங்கள் சேதநங்களோடும் அசேதநங்களோடும் ஸஜாதீயமாகச் சொல்வதற்கு அசக்யமாக இருப்பதும், ஸதஸத் விலக்ஷணமாயும் குணத்ரயாதீதமாயும் க்ரியை இல்லாததாகவு மிருக்கிற பரப்ரஹ்மத்தினிடத்தில் எவ்வாறு நேராக அபிதா வ்ருத்தியினால் உணர்த்துவதற்காக ப்ரவ்ருத்திக்கின்றன?] என்று வினவினான். இந்த ப்ரச்நத்திற்குத் தாம் சொல்லப்போகிற உத்தரத்திற்குக் கல்பாவஸாநத்தில் (அதாவது ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில்) பரம புருஷனுடைய முன்னிலையில் மூர்த்திகரித்து நின்றுகொண்டு பரமனைத் துதிக்கின்ற வேத புருஷனுடைய முகத்தினின்று வெளிப்பட்டிருக்கிற ச்ருதி கீதார்த்தத்தை 'ஜய ஜய' என்று ஸம்வாதமாகக் காட்டுகிறார்.

'யஸ்ய நிச்வஸிதம் வேதா:' என்கிறபடி, 'எந்த வேதமானது பரம புருஷனுடைய ச்வாஸரூபமாக இருக்கிறதோ, நான்முகனைப் படைத்து ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டி செய்யும்படி பரம புருஷன் அவருக்கு அதிகாரம் கொடுக்கும் ஸமயத்தில் எந்த வேதத்தை ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி மாத்ருகையாக அளித்தாரோ, அத்தகைய மஹிமை வாய்ந்த ச்ருதியினாலேயே சொல்லப்பட்ட தத்வார்த்த கர்ப்பிதமாக இருப்பதால், இந்த ச்ருதி கீதையின் மஹிமை அவாங்மநஸ கோசரமானது. புராணங்களாலும் இதிஹாஸங்களாலும் ப்ரஹ்ம ஸூத்ரங்களாலும் அவைகளின் பாஷ்யங்களாலும் தெளியாத அர்த்தங்களெல்லாம் இந்த ச்ருதி கீதையில் நன்கு தெளிவாக அறியத்தக்கவைகள். இதுதான் வ்யாஸருடைய யதார்த்தமான பாவத்தை ஸ்பஷ்டமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. ச்ருதிகளின் பரம தாத்பர்யம் இவ்விடத்திலேயே அபிஜ்ஞர்களால் நன்கு கண்டறியத் தக்கது. இந்தக் கட்டத்தை ஆமூலாக்ரம் பரிசீலநம் பண்ணினவர்களுக்கு, 'இது தான் ப்ரஹ்மஸூத்ர ப்ரதிபாத்ய வஸ்துவென்றும், இந்த மதம் தான் வேதாநுஸாரியான மதமென்றும், இதில் தான் ப்ரஹ்ம ஸூத்ர ப்ரணேதாவான வ்யாஸருக்கு முக்யமான தாத்பர்யம்' என்றும் ஸ்பஷ்டமாகப் புலப்படும்.

ஸர்வ மதஸ்தர்களாலும் ப்ரமாணமாக ஆதரிக்கத்தக்கதான இந்த ச்ருதி கீதா க்ரந்தத்திற்குப் பரம தாத்பர்யம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலேயே உள்ளது. அந்த விஷயத்தை ஸப்ரமாணமாக என் சிற்றறிவுக்குத் தக்கவாறு எடுத்து உரைக்கிறேன். இந்தக் கீதையின் தொடக்கத்தில் பரீக்ஷித்துக்கும் ஸ்ரீ சுகருக்கும் நடந்த ஸம்வாதம் போல், இதே விஷயமான ஸம்வாதம் பதரிகாச்ரமத்தில் ஸ்ரீமந் நாராயணனுக்கும் நாரதருக்கும் நடந்ததாகவும், அந்த ஸம்வாதத்திற்கு ஸம்வாதமாக ஜநலோகத்தில் ப்ரஹ்மாவின் மாநஸ புத்ரர்களான ஸநந்தநாதிகளுக்கு நடந்த ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்தாந்தத்தை நாரதருக்கு நாராயண மஹர்ஷி எடுத்து உரைத்ததாகவும், அச்சமயத்தில் "ப்ரஹ்மவாத: ஸுமஹாந் ச்ருதயோ யத்ர சேரதே" என்று நாரதரை உத்தேசித்து ஸ்வாபிப்ராயத்தை மஹர்ஷி வெளியிட்டார். இதன் கருத்து:—ப்ரஹ்மவாதம் நடந்தேறியது. எந்த ப்ரஹ்ம வாதத்தில் ச்ருதிகள் எல்லாம் (சேரதே) ப்ரதாரண பயமில்லாதவைகளாக ஐககண்ட்யத்தை அடைந்து, ஸாகபாகக் கவலையற்று இருக்கின்றனவோ என்பது. இதனால் என்ன விஷயம் வெளிப்பட்டதென்றால்; ஸர்வவேத ப்ரதிபாத்யனை பரம புருஷனே நாராயணஸ்வரூபியாகப் பதரிகாச்ரமத்தில் அவதரித்தானென்பது தான். அவன் தன் வாக்கினாலேயே ஜநலோக வாஸிகளான ப்ரஹ்மதேவனுடைய ஸநந்தநாதிகளான மாநஸபுத்ரர்களின் ப்ரஹ்ம வாதத்தைத் தன் உக்திக்கு ஸம்வாதமாக எடுத்துரைத்து, அந்த ப்ரஹ்ம



வாதத்திற்கு ஸர்வ ச்ருதிகளின் ஐககண்ட்ய ப்ரதிபாதநத்தினால் மேன்மையைச் சொன்னதினாலேயே ஸர்வ ச்ருதிகளுக்கும் ஐககண்ட்யம் செய்து, ச்ருதிகளுக்குப் பொருள் கூறுவதுதான் ஸ்வாபிப்ராயம்; அதுதான் வாஸ்தவமான ச்ருத்யர்த்தம்; இந்த அர்த்தத்தை அவலம்பித்துத் தோன்றியிருக்கும் பாஷ்யமே ப்ரஹ்மஸூத்ர பாவ ப்ரகாசகமாகும் என்று ஸ்பஷ்டமாக வெளியிட்டார். அப்படிப்பட்ட பாஷ்யம் நமது பகவத் ராமாநுஜ பாஷ்யமே. இதில், ஸகுண ச்ருதிகள் ப்ரஹ்மத்தினிடத்திலுள்ள அநந்த கல்யாண குண ப்ரதிபாதகங்களானதால் முற்றிலும் ப்ரமாணங்களென்றும், நிர்க்குண ச்ருதிகள் ப்ரஹ்மத்தினிடத்திலுள்ள ஹேய குண ராஹித்யத்தைச் சொல்வதில் கருத்துள்ளவைகளாதலால் முழுமையும் ப்ரமாணங்களென்றும், பேத ச்ருதிகள் ப்ரஹ்மத்திற்கும் மற்ற சேதநாசேதநங்களுக்குமுள்ள வாஸ்தவ பேதத்தை ப்ரதிபாதிப்பதில் கருத்துள்ளவைகளாக இருப்பதுபற்றி ப்ரமாணங்களென்றும், அபேத ச்ருதிகள் விசிஷ்டைக்ய ப்ரதிபாதந பரங்களாதலால் அனைத்தும் ப்ரமாணதமங்களென்றும், உடையவரால் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அது, ஸர்வ ச்ருதிகளுக்கும் கொஞ்சமேனும் விரோதமும் வையர்த்யமுமின்றி ஐகரஸ்யத்தைக் காட்டுதலால், ப்ரமாணங்களாலும் ப்ரமாணாநுக்ராஹக ந்யாயங்களாலும் உபப்ரும்ஹிதமான ஸ்ரீ பாஷ்யமே ஸர்வோத்தமம். இதைக் கருத்தில் கொண்டே அபியுக்தாக்ரேஸரர் இவ் வர்த்தங்களை ச்லோகத்தால் பின் வருமாறு ஸங்க்ரஹித்திருக்கிறார்:—

'நித்யம் ஹேயப்ரமாணாவயவநிதபரா நைகமக்ஷணவாதா: ச்ருதய
ஊவத்ராயதா: ஸமானோத்தய ப்ருஹம் அணவுவதாவதா உஹணா: ।
அபேத ச்ருதயோ விசிஷ்டவிஷயா: நிஷ்கர்ஷ ஸாஷோபாச்ரயா
ஹேதோக்தி ஹ்ருதிமாவிரு ச்ருதிஹிதம் ராமாநுஜீயம் மதம் ॥'

ஆக்ரஹத்தைவிட்டும், ஆக்ரஹ நிதாநமான பாப பந்தத்தினின்றும் விடுபட்டும், நிஷ்பக்ஷபாதமான மனத்துடன் பாஷ்யங்களைப் பரிசீலநம் செய்யும் மஹாந்களுக்கு இந்த ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தின் மஹிமை நன்றாகப் புலப்படும். தவிரவும், இந்த பாஷ்யமானது தான் போனபோக்காக யுக்திகளைக்கொண்டு பலாத்கரித்து, ஸூத்ராக்ஷரங்களை இழுத்து, ஏதோ ஒருவிதமாக அர்த்தங்களைச் சொல்லவில்லை. ப்ராசீநங்களான ஆர்ஷ ஸூக்திகளையும் ஸத்ஸம்ப்ரதாயத்தையும் அநுஸரித்து, ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்யங்களை எள்ளளவேனும் அதிலங்கநம் செய்யாமல், பூர்வாசார்யர்களால் க்ஷுண்ணமான மார்க்கத்திலேயே நடைபெற்றுள்ளது. 'ஸமாநாதிகரணங்களாக ப்ரஹ்ம சப்தத்தோடு ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற சிதசித் வாசக சப்தங்கள் எவ்வண்ணம்

ப்ரஹ்மத்தைநேராக அபிதாவ்ருத்தியினால் உணர்த்தத் திறமையுள்ளவைகள்?' என்கிற பரீக்ஷித்தினுடைய வினவுக்கு, ச்ருதிகள் ஸ்ருஷ்டி தசையில் பகவானைத் துதித்திருப்பதே உத்தரமாகக் கடவதென்று எண்ணி, சுக ப்ரஹ்மரிஷியானவர் ஆரம்பத்தில், 'புத்தீந்த்ரியமந:ப்ராணாந் ஜநாநாமஸ்ருஜத் ப்ரபு:। மாத்ரார்த்தம் ச பவார்த்தம் ச ஆத்மநேऽகல்பநாய ச ॥' [பரம புருஷன் ஜீவன்களுக்குப் புத்தி இந்த்ரியங்கள் மநஸ் ப்ராணவாயு இவைகளைத் தன்னை ஆராதிப்பதற்குப் பரமஸாதநமாக இருக்கிற தேஹங்களை உண்டு பண்ணுவதற்காகவும், நிச்ரேயஸ ரூபமான அப்யுதயத்தின்பொருட்டும், அத்யாத்ம ஜ்ஞாநத்தின் பொருட்டும் உபாயாநுஷ்டாநத்தால் தேவாதி பேத நிவ்ருத்தி பூர்வகமாக முக்தியை அடைவதின் பொருட்டும் உண்டுபண்ணினார்.] என்று கூறினார். பரீக்ஷித் மஹாராஜன், 'சிதசித் வாசக சப்தங்கள் அனைத்தும் முக்ய வ்ருத்தியினால் எவ்வண்ணம் ப்ரஹ்மத்தை உணர்த்தும் திறமையுள்ளவைகள்?' என்று வினவினதற்கு உத்தரமாக' 'புத்தீந்த்ரிய' என்கிற ச்லோகத்தால் 'பரம புருஷன் உலகத்தை ஸ்ருஷ்டி செய்தான்' என்று மஹர்ஷி உத்தரம் கூறியிருப்பது எவ்வண்ணம் பொருந்து மென்று ஆபாத ப்ரதீதி யுள்ளவர்கள் சங்கிப்பார்கள். இந்த ச்லோக ப்ரதிபாத்யங்களான அர்த்தங்கள், ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதத்திற்கே (உரிய ப்ரதாந ப்ரதிதந்த்ரமாயுள்ள) சேதநா சேதநங்களுக்கும் ஈச்வரனுக்கு முள்ள சரீராத்ம பாவ ஸம்பந்தத்தை ஒப்புக்கொண்டாலல்லது உத்தரமாகா. இந்தச் சரீராத்ம பாவ ஸம்பந்தத்தை அஸ்திவாரமாகக் கொண்டே இந்த ச்லோகத்தை ஸ்ரீ சுகர் கூறியிருக்கிறார். மற்ற ஸித்தாந்திகள் ஒருவருக்கும் இசையாதே தமது ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தம் ப்ரதிதந்த்ரம். வேதாந்திகளான நம்முடைய தர்சநத்திற்கே அஸாதாரணமும் ப்ரதாநமுமான அர்த்தம், சேதநாசேதநங்களுக்கும் ஈச்வரனுக்கு முண்டான சரீராத்ம பாவ ஸம்பந்தமே. இந்த ஸம்பந்தத்தை மூலதளமாக ஒப்புக்கொண்டாலல்லது, ச்ருதி கீதையின் உபக்ரமத்திலுள்ள சுகப்ரஹ்ம ரிஷியின் திவ்ய ஸூக்திகளும் ஸம்வாதமாக மஹரிஷியினால் உதாஹரிக்கப்படுகிற ச்ருதிகீதார்த்தங்களும் பொருந்துகின்றனவில்லை. இந்தச் சரீராத்ம பாவ ஸம்பந்தத்தை ஒப்புக்கொண்டால் எவ்வாறு பொருந்துமென்று கேள்வி பிறக்குமேயானால் அதற்கு மறுமொழி கூறப்படுகிறது. அவதாநத்துடன் மேல் விஷயங்களைக் கவனிக்க ப்ரார்த்திக்கிறேன்.

பரமபுருஷன் தான் அந்தராத்மாவாக இருந்துகொண்டு, நாமரூப நிர்வாஹகனாக ஆவதற்குப் புத்தி முதலிய சப்தங்களால் உபலக்ஷிதையான ஸமஷ்டி பரம்பரையினால் மஹாபூத பர்யந்தம் தன் ஸ்வரூபத்தை அந்தந்த வஸ்து சரீரகமாகப் பரிணமிக்கச் செய்து, அந்தந்த வஸ்து மயனாக ஆகி,



மறுபடியும் ஸதலச்சப்த வாச்யங்களான சிதசித்துக்களோடு மிச்ரமான தேவ திர்யக் மநுஷ்ய ஸ்தாவராத்மக ஜகத் சரீரகனாகவுமாய், அந்தந்த சப்தங்களால் வாச்யனாகவு மானான். இவ்வண்ணம் எல்லா சிதசித் பதார்த்தங்களுக்கும் பரமாத்மா சரீரமாக இருப்பதே ஸ்வபாவமாதலாலும், இவைகளுக்கு அப்படிப்பட்ட தன்மையினாலேயே வஸ்துத்வ ஸித்தியினாலும், இவை அப்ருதக் ஸித்த விசேஷணமாக இருப்பதாலும், அப்ருதக் ஸித்த விசேஷணவாசக சப்தங்களுக்கு ஆக்ருத்யதிகரண ந்யாயத்தினால் விசேஷ்ய பர்யந்தாபிதாந ஸ்வபாவத்தால், அந்தச் சப்தங்கள், பரமாத்மாவோடு அப்ருதக் ஸித்த விசேஷணங்களாக இருக்கிற தன்தன் அர்த்தங்களை ப்ரவ்ருத்தி நிமித்தமாகக்கொண்டு பரமாத்மாவை உணர்த்துதல் முக்யமே. இக்காரணத்தால் சிதசித் வாசகங்களான எல்லா சப்தங்களும் பரமாத்மாவையே உணர்த்துகின்றன என்பது திண்ணமாயிற்று.

தவிரவும் இந்த ச்ருதிகீதையி லிருக்கிற ச்லோகங்கள் இருபத்தெட்டிலும் எங்கெங்க பதங்களால் நம் ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்தார்த்தங்கள் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றனவோ, அவைகளை;என் சிற்றறிவுக்கு எட்டினமட்டில் எடுத்துரைக்கிறேன் :—

'ஜயஜய' என்கிற முதல் ச்லோகத்தில் 'அஜயாத்மநா ச சரத:' என்கிற பதங்களால் ப்ரக்ருதி புருஷவிசிஷ்டனான பரமாத்மாவுக்கு ஜகத் காரணத்வம் என்பது சொல்லப்பட்டது. 'ப்ருஹதுபலப்தம்' என்கிற இரண்டாவது ச்லோகத்தில், 'அவசேஷதயா உபலப்தம் ஏதத் ப்ருஹத் அவயந்தி' என்கிற வாக்யத்தினால் கார்ய காரணங்களுக்கு அநந்யத்வத்தையும் ஸாதித்து, சிதசித் விசிஷ்டப்ரஹ்மமே ஜகத்ரூபமான கார்யமாகப் பரிணமிக்கிற தென்பதையும் வேதபுருஷன் கூறினான். 'இதி தவ ஸூரய:' என்கிற மூன்றாவது ச்லோகத்தில், 'பஜந்தி யே பதம் அஜஸ்ர ஸுகாநுபவம்' என்கிற வாக்யத்தினால் பரமாத்மோபாஸகனுக்கு அகண்டபரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவ ரூபமான மோக்ஷப்ராப்தி கூறப்பட்டது. 'த்ருதய இவ' என்கிற நான்காவது ச்லோகத்தில், 'புருஷவிதோऽந்வயோऽத்ர சரமோऽந்நமயாதிஷு ய:' என்கிற வாக்யத்தினால் ஆநந்த வல்லியில் அந்நமய ப்ராணமய மநோமய விஜ்ஞாநமய ஆநந்தமயங்களில் புருஷாகாரமாக நிரூபிக்கப்பட்டுள்ள கடைசியி லிருக்கிற யாதொரு ஆநந்தமய வஸ்துவுண்டோ அந்த வஸ்துதான் பரப்ரஹ்ம மென்று நிஷ்கர்ஷிக்கப்பட்டது. 'உதரமுபாஸதே' என்கிற ஐந்தாவது ச்லோகத்தில், 'புநரிஹ யத் ஸமேத்ய ந பதந்தி க்ருதாந்தமுகே' என்கிற வாக்யத்தினால் முமுக்ஷோபாஸகனுக்கு மோக்ஷமே யொழிய மீண்டும் ஸம்ஸார

மருகாந்தாரத்தில் கமநாகமநங்க ளில்லை என்பது சொல்லப்பட்டது. ‘ஸூக்ஷ்மவிதி’ என்கிற ஆருவது ச்லோகத்தில், தன்னால் உண்டு பண்ணப்பட் டிருக்கிற தேவாதி சரீரங்களில் ஜீவாந்தராத்மாவாகத் தான் ப்ரவேசித் திருந்தபோதிலும் அந்தந்த ஸ்தாந தோஷங்களால் அணுகப்படாதவனாகவும் பரம ப்ராப்யனாகவும் பரம புருஷ னிருக்கிறா னென்பது கூறப்பட்டது. ‘ஸூக்ஷ்மத வாமேஷு’ என்கிற ஏழாவது ச்லோகத்தில், ‘வாஜ்ஷம வடிஜூவிஜ ஶக்தியநோஶ கநதம்’ என்கிற பதங்களால் தர்ம பூதஜ்ஞாநத்தினால் உள்ளும் புறமும் வ்யாபியா நின்ற ஜீவதத்வமானது விசேஷணமாக இருப்பதால், விசிஷ்ட ப்ரஹ்மாம்ச மென்பது நிர்த்தாரணம் செய்யப்பட்டது. ‘தூமயிறசாதகவ நிமஶாய’ என்கிற எட்டாவது ச்லோகத்தில் பரம ஸௌலப்ய ஸௌசீல்ய குண ப்ரகாசகமான ராமக்ருஷ்ணாத்யவதார திவ்ய சேஷ்டிதாநுபவத்தினால் ஸம்ஸார பந்தத்தினின்று விடுபட்டு ஜீவாத்மாக்கள் அபவர்க்கத்தை அடைகிறார்க ளென்பது கூறப்பட்டது. ‘ஸுடிஜ வயம்’ என்கிற ஒன்பதாவது ச்லோகத்தில், பகவானை ஆச்ரயிப்பதுதான் சரீரமெடுத்ததற்கு பரம ப்ரயோஜந மென்பது நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வாறாக, முறையே பிந்தின ச்லோகங்களால், ‘ப்ரதிகூலர்களுக்குங் கூட பகவத்ஸ்மரணம் உத்தாரகம், சாஸ்த்ரமின்றி பகவத் ஸ்வரூபத்தை அறிவது அசக்யம், முற் கூறப்பட்டுள்ள அர்த்தங்களுக்கு விருத்தங்களான தார்க்கிக ஸித்தாந்தங்கள் அஜ்ஞாந மூலங்கள், பகவத் ஜ்ஞாந முள்ளவர்களுடைய ப்ரபாவாதிக்யம், பகவத் விமுகர்களின் அபகர்ஷம், எல்லாவற்றுக்கும் பகவான் ஒருவனே ப்ரசாஸிதா, எல்லா சேதந வர்க்கங்களுடன் விலக்க முடியாத ஸம்பந்த விசேஷ மிருப்பதாலும் ஹேய ப்ரத்யநீகனாக இருப்பதாலும் பரமபுருஷனுடைய கடாக்ஷத்தாலேயே ஜீவாத்மாக்களுக்கு மோக்ஷம், ஜீவன்களுக்கு ஸ்வாபாவிகமாயுள்ள அணுத்வ விருத்தமான விபுத்வவாதம் துஷ்டம், நித்யமாக இருக்கிற ப்ரக்ருதி புருஷன் இவ்விரண்டுக்கும் உத்பத்தி யின்மை, ஜகத்காரண வஸ்துவான பரமாத்மாவினிடம் பக்தி செய்பவர்களுக்குப் பயமின்மை, ஆசார்ய ஸேவையை இழந்தவர்களுக்கு முற் கூறப்பட்ட பகவத் பஜநத்தின் அலாபம், பகவத்பஜநம் பண்ணுகிறவர்களுக்கும் பண்ணாதவர்களுக்கும் முறையே வேறு லோகங்களின் அநபேக்ஷையும் லோகத்தினது தௌர்லப்யமும், ஸர்வஜ்ஞனான பரமாத்மோபாஸகனுக்கு மற்ற வஸ்துக்களில் உண்டாகும் வைராக்யம், கார்ய மித்யாத்வ வாதத்தின் ப்ரதிக்ஷேபம், ம்ருத்பிண்ட கார்யாதி த்ருஷ்டாந்தங்களுக்குக் கார்ய மித்யாத்வ பரத்வ வர்ணநம் அவித்வான்களுக்கே ஸம்ருத்யம், குஹா ப்ரவேசம் ஜீவன் பரமாத்மா இவ்விருவர்களுக்கு மிருக்க ஒருவன் பரவசனாகக் கர்ம பலனை அநுபவித்தலும் மற்றொருவன் ஸ்வதந்த்ரனாக இருந்து லோக துக்காநுபவ மின்றி ப்ரகாசித்தலும், பகவத் ப்ராவண்ய மிருந்தபோதிலும் காம க்ரோதாதிகளால் தூஷிதமான அந்த:கரணமுள்ளவர்களுக்கு அநர்த்த ப்ராப்தி, அநந்ய ப்ரயோஜநர்களாக பகவத் பஜநம் செய்பவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் லோகம், பரம புருஷனுடைய ‘மாஹாத்மயம் அளவிடமுடியாதது’ என்கிற இந்த அர்த்தங்கள் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன.



‘உதெஃதஜூறணஃ வாலுஃ ஶுஶுஜதூாதூாதஜஶாவஜம் ।
ஸதாடிஜ ஜயாதஅஉ ஷுஸா ஜூஸ்வாதூெனா மதிம் ॥’

[ச்ருதிகள் கூறிய வண்ணம் இந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூப ஸ்வபாவ குண விபூதிகளைக் கேட்டு நான்முகனுடைய மாநஸ புத்ரர்களான மரீசி முதலியோர் பலஸித்தியைப் பெற்றவர்களாகப் பரமாத்மாவினுடைய யாதாத்ம்யத்தை அறிந்து, பிறகு பகவத்குண ப்ரவக்தாவான ஸநந்தநரைப் பூஜித்தார்கள்.] இவ்வண்ணம் ச்ருதி கீதையின் ஸாரதமாம்சம் எடுத்து உரைக்கப்பட்டது.

ஸவொவெஷடிஶாநிஶாதஉதிஜா வதூாவொஜ ஹாவொஜஜூூ
தவஶநவடிஜவஉஜூஶநவஂ ஶுஜதூஜூதீதொ டியள ।
உவொஷுதூ ஸாஉவிஉதம் ஊநிவிடிாஂ ஶ்ரீவாஸடிாவொஜ தக
ஸாஷ்ாஜூஉணயொமி வாஜூவடியாநிவைஜ தஜெஷு ஸதாம் ॥

நிஉஜூாமணமஂணெகநிபஸஹாவா
விஷ்ஜாவிநொடிஶவிகா ஶவிகா முமணதூா: ।
ஸஜூஷூஉஜ விதயெஜ ஸாஉவெஜஉஶாணஂ
டிாவொஜ ஸிஷுதா உஉடிா ஊநிதஶ ஶதூஂ ।

ஷூவாஸ ஶுஜூதி உவமதிதாமீதா ஜூ அ கிஉ ஆஜ உநிரெஷஃ ।
தடிவி வதூவிவஅதூாஸஂ உஷிதம் ஒளஜூா ஜூஷூஷிடிஉஶதூா: ॥

ஸ்ரீ:

# ஹிந்து விதவைகள் தலை மயிரை நீக்க வேண்டுமா?

[ஸ்ரீ வித்வான் T. S. நடேச சாஸ்திரிகள், "வால்மீகி" மாயவரம்.]

———:O:———

19–7–28-ல் வெளிவந்த "ஹிந்து" பத்ரிகையின் 4-ம் பக்கத்தில் "Social Reform in India" (இந்தியாவில் ஸமூஹ சீர்திருத்தம்) என்ற தலைப் பெயரின் கீழ், தற்காலம் பம்பாய்க் கடுத்த டாடாரி லிருக்கும் மிஸ்டர் ஆர். க்ருஷ்ணய்யர் என்பவர், பீஹார் மாகாணத்தில் "மகாத்மா" காந்தி கோஷா என்ற வழக்கத்தை நிவர்த்திக்க முயற்சிப்பதாகவும், வயது க்ரமத்தைக்கூட கவனியாமல் விதவைகளை முண்டநம் செய்விக்கும் கொடிய வழக்கம் தென்னிந்தியாவில் ப்ராம்மணர்களுக் குள்ளும் மஹாராஷ்ட்ர தேசத்தில் தக்ஷிண ப்ராம்மணர்களுக்குள்ளும் மாத்ரம் இருக்கிற தென்றும், இந்தியாவின் இதர பாகங்களில் அவ்வழக்கம் இல்லை யென்றும், சென்னை மாகாணத்திலுள்ள சிறு பான்மையானவர்களும் விதவைகளுக்கு முண்டநம் செய்விக்கும் கொடிய வழக்கத்தை நிவர்த்திக்க வேண்டுமென்றும் சொல்லி யிருக்கிறார்.

சென்ற 1926—27-ல் ஆறுமாஸ காலமாகப் பண்டாபுரம், பூனா, பம்பாய், நாஸிகை, ஓங்காரம், உஜ்ஜினி, புஷ்கரம், மேற்கில் ஸோமநாதம் துவாரகை, வடக்கில் ஹரித்வாரம், ஸ்ரீகாசி, ஆக்ரா, மதுரா, கோகுலம் ப்ருந்தாவனம், டில்லி, குரு க்ஷேத்ரம், நைமிசம், அயோத்தி, கயா, கல்கத்தா, கிழக்கில் ஜகந்நாதம் முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்தேன். ஹிந்து ஸ்திரீகளில் எந்த ஜாதி விதவைகளுக்கு மாத்ரம் முண்டநம் செய்விக்கிறார்களென்பதை அப்பொழுது நான் விசாரித்துத் தெரிந்துக்கொள்ள வேண்டிய அவசியம் நேரிடவில்லை. 28-4-28ல் மயிலாப்பூர் தேசீயப்பெண் உயர்தரப் பாடசாலையில் விவாஹ வயது மசோதாவிற்கு ஆதரவளிப்பதற்குக் கூடிய மீட்டிங்கில், (ஸ்வராஜ்யம்) மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காருடைய மனைவியாரால், 'சென்ற வருஷம் நான் வட இந்தியாவில் மதுரா, ப்ருந்தாவநம் சென்றிருக்கையில் அவ்விடத்தில் "மேளா" எனப்படும் உத்ஸவம் நடைபெற்று வந்தது. அது நிமித்தம் வங்காளத்திலிருந்து அநேக ஆயிரக்கணக்கான பால விதவைகள் யாத்ரிகர்களாக வந்து கூடியிருந்தார்கள். அவர்களில் சுமார் 10-வயது முதல் 25-வயதிற்கு மேற்படாத சிறுமிகள் தலை மொட்டை அடிக்கப்



பட்டு வெள்ளை வஸ்திரம் அணிந்து, கூட்டம் கூட்டமாகத் தெருக்களில் கோவிலுக்குச் செல்லும் காட்சியைக் காண மனம் சகிக்கக்கூடாம லிருந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (சுதேசமித்ரன் 30–4–28, 7-ம் பக்கம் பார்க்கவும்) நேரில் பார்த்த ஸாக்ஷி இவ்விதம் சொல்லுகையில், இந்தியாவில் இதர பாகங்களில் விதவைகளை முண்டநம் செய்விப்பதில்லை என்று ஷெ அய்யர் அவர்கள் சொல்வதை எவ்விதம் நம்புவது? இந்த அநேக ஆயிரக் கணக்கான விதவைகள் யாவரும் ப்ராம்மணர்கள் தான் என்றும், இதர ஜாதி விதவைக ளல்லவென்று சொல்லவும் வழியில்லை.

மிஸ்டர் கிருஷ்ணய்யர், தென்னிந்தியாவில் தென்கலை ப்ராம்மணர்கள் விதவைகளை முண்டநம் செய்யும் கோஷ்டியாருடன் சேரவில்லை என்று சொல்லுகிறார். அது உண்மையே. ஆனால் அப்படிப்பட்ட தென்கலையார்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களுள் ஒரு சிறிய வகுப்பினரே. ஸ்ரீராமாநுஜாசார்யர் கி. பி. 1017-ல் அவதரித்தார். வேதாந்தாசாரியர் என்ற ஸ்ரீ வேதாந்த தேசிகர் கி. பி. 1268-ல், (அதாவது ஸ்ரீராமாநுஜர் அவதரித்த 251 வருஷங்களுக்குப் பிறகு) அவதரித்தார். இவர் ஸ்ரீராமாநுஜரைப் பின்பற்றியவர்; புராதந ஸ்மார்த்தாசாரத்தில் மிக்க விச்வாஸ முள்ளவர். ஸ்ரீ தேசிகரைப் பின்பற்றியவர்களுக்கு வடகலையார் என்று பெயர்; இவர்கள் ஸ்ம்ருதிகளில் சொல்லிய ஆசாரங்களை உறுதியுடன் அநுஷ்டிப்பவர்கள். தேசிகரைப் பின்பற்ற இஷ்டமில்லாதவர்கள், தேசிகருடைய காலத்தில் வஸித்தவரான ஸ்ரீ லோகாசார்யர் என்பவருடைய தலைமையின் கீழ் வேறு ஒரு வகுப்பாகப் பிரிந்தார்கள். இவர்களுக்குத் தென்கலையார் என்று பெயர். தென்கலை விதவைகள் தலைமயிரை நீக்குவதில்லை. இந்த வகுப்பு, கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் வஸித்துவந்த ஸ்ரீ மணவாள மஹாமுனி என்பவருடைய காலத்தில் அதிக பலத்தை அடைந்தது. இவ்விதம் ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகளுக்குள் இருவகுப்புகள் ஏற்பட்டன. தென்கலையாருக்கும் வடகலையாருக்கும கொள்வினை கொடுப்பினை உண்டு. ஒரு தென்கலை வகுப்புப் பெண் வடகலை வகுப்புப் புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டு விதவையாக நேரிட்டால், கண்டிப்பாய் முண்டநம் செய்தே தீரவேண்டும். ஸ்மார்த்த (பெரும்பாலும் அத்வைதி) ப்ராம்மணர்களுக்குள் இவ்வழக்கம் தொன்றுதொட்டு எண்ணிறந்த காலமாய் அநுஷ்டாநத்தி லிருந்து வருகிறது. ஸ்ரீமத்வாசார்யர் கி.பி. 1119-ல் அவதரித்தார். இவரைப் பின்பற்றிய த்வைதிகளும் இவ்வழக்கத்தை அநுஸரித்து வருகிறார்கள். வைசிய (கோமுட்டி) ஜாதியாரும் இதை அநுஸரித்து வருகிறார்கள். ஆகையால் விதவையான ஸ்திரீகளுக்கு சிகையை விஸர்ஜநம் செய்வதென்பது புராதந

மும் நன்மையைத் தரத்தக்கதுமான அநுஷ்டானமென்று நிச்சயிக்கவேண்டி யிருக்கிறது. இவ்வழக்கத்தை நவீந இந்திய ஸமூஹத்தார்கள் சென்ற சுமார் 40-வருஷ காலமாக நிந்தித்து வருகிறார்கள்.

இந்த க்ரூர வழக்கத்துக்கு என்ன ஆதார மிருந்தபோதிலும், ஸம்போக வயது உயர்த்தப்பட்டும், விதவைகளின் மறுமணம் ப்ரதிவருஷமும் அதிகரித்தும் வரும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இனி நீடித்துவர இடங் கொடுக்கக் கூடாதென்றும், இதை நிறுத்துவதற்கு ஜாதிப்ரஷ்டம் செய்வார்களென்ற பயமும் அறியாமையும்தான் முக்ய தடைகளாகக் குறுக்கிடுகின்றன வென்றும் ஷை அய்யர் சொல்லுகிறார்.

1925-ம் வருஷத்தில் ஏற்பட்ட சட்டம் ஒன்றால் விவாஹமான பெண்களுக்கு ஸம்போக வயது 13 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இதுவரையில் எத்தனை கேஸ்கள் கோர்ட்டுக்கு வந்திருக்கின்றன வென்பதை அய்யர் நமக்குச் சொல்லட்டும். விதவையை மறுமணம் செய்து பிறக்கும் பிள்ளை விதவாவிவாஹ சட்டத்தின்படி பெற்றோர்களின் சொத்துக்களுக்குப் பாத்யஸ்தனாவான்; ஆனால் ஹிந்து மத தர்ம சாஸ்த்ரத்தின்படி அவன், தன் பெற்றோர்களுக்குக் கர்மம் செய்ய அர்ஹதை யற்றவன். ஹிந்து மதத்தில் பற்றுள்ளவர்கள் இவர்களை ஆர்ய ஸமாஜிகளையும் ப்ரம்ம ஸமாஜிகளையும் போலத்தான் நினைக்கிறார்கள். எந்த விவேகமுள்ள அரசாங்கமாவது இவர்களுடன் ஸமபங்க்தி போஜநமும் கொள்வனை கொடுப்பனையும் செய்யும்படி மற்றவர்களைக் கட்டாயப்படுத்தி, இவர்களை ஜாதிப்ரஷ்டத் தன்மையிலிருந்து விடுவிக்கத் துணியுமா? புராதநமும் நன்மையைத் தரத்தக்கதுமான மதத்தை அநுஷ்டித்துவரும் ஸொந்த ஜனங்களைக் காட்டிலும் தங்களைக் கெட்டிக்காரர்களென்றும் விவேகிகளென்றும் நினைத்து வரம்பை மீறுகிறவர்கள், பஹிஷ்காரத்தால் ஏற்படும் கஷ்டங்களை மௌநமாய் அநுபவிக்கத்தான் வேண்டும். இவர்களுடைய கொள்கைக்கிணங்காத மற்றவர்களையும் தங்களுடைய வலைக்குள் விழுக்க இவர்கள் ஏன் முயற்சிக்க வேண்டும்? விவாஹமாகாத கந்நிகைகள் தாராளமாகக் கிடைத்து விவாஹம் செய்துகொள்ள வரன்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கையில், விதவைகளை மணம் செய்துகொள்ளும் புருஷர்களின் அந்தஸ்து எத்தன்மையுடையது?

இந்த க்ரூரமான வழக்கத்துக்கு ஏதேனும் சாஸ்த்ரத்தில் ஆதாரமிருக்கிறதா வென்று, தான் அநேக பெரியோர்களைக் கேட்டதாகவும், அவர்கள் இது முன்னோர்கள் நாள் முதல் பரம்பரையாய் அநுஷ்டிக்கப்பட்டு வருவதைத் தவிர தகுந்த ஆதார மிருப்பதாகத் தெரிய



வில்லை யென்று கூறியதாகவும், இதற்கு ஏதேனும் சாஸ்திர ப்ரமாணம் இருப்பதாகத் தெரிவித்தால் அதைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் மிஸ்டர் அய்யர் கூறுகிறார்.

இந்த உத்க்ருஷ்டமான வழக்கத்துக்கு சாஸ்த்ரத்தில் ஆதாரமிருக்கிறதென்பதை ருஜூப்பிக்கும்பொருட்டு அடியிற்கண்ட வசநத்தை இங்குக் குறிப்பிடுகிறேன்:—

'விதவாகபரீபந்தோ பர்த்ருபந்தாய ஜாயதே ।
ஶிரஸோ வபநம் தஸ்மாத் கார்யம் விதவயா ஸதா ॥'

["விதவை தன் கூந்தலை முடிதல், இறந்துபோன கணவனைக் கட்டுகிறது (நற்கதியை அடையவொட்டாமல் தடைசெய்கிறது.) ஆகையால் விதவை எப்பொழுதும் முண்டநம் செய்துகொள்ளவேண்டும்"] இந்த வசநத்தையும் விதவைகளுக்கேற்பட்ட இதர தர்மங்களைக் குறிக்கும் வசநங்களையும் அடியிற்கண்ட க்ரந்தங்களில் "விதவா தர்மம்" என்ற தலைப்பெயரினடியில் காணலாம்—பக்கம் 440 நிர்ணய ஸிந்து, நிர்ணய ஸாகர ப்ரஸ் பதிப்பு, பம்பாய் 1926. பக்கம் 363 தர்மஸிந்து ஜநார்த்தந மஹாதேவ கூர்ஜர் பதிப்பு, பம்பாய் 1904. பக்கம் 110, ஸம்ஸ்கார மயூகம், குஜராதி ப்ரஸ் பதிப்பு, பம்பாய் 1913. பக்கம்-468, வைத்யநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரம தர்மகாண்டம் ஸமஸ்க்ருதமும் தமிழ் மொழி பெயர்ப்பும், சிதம்பரம்.

ஷை அய்யர் அவர்களுக்கு நான் கடைசியாகச் சொல்ல விரும்புவது யாதெனில்: ஷை நிபந்த கர்த்தாக்கள் 4-பேர்களில் முதல் மூவர் வட இந்தியாவைச் சேர்ந்தவர்களென்பதும், கடைசி ஒருவர் மாத்திரம் தென்னிந்தியாவைச் சேர்ந்தவரென்பதும், ஆகையால் இந்த க்ரந்தங்கள் ஹிமாசலம் முதல் கந்யாகுமரி வரையிலுமுள்ள ஸமஸ்த ஹிந்துக்களுக்கும் பொதுவென்பதும் தான்.

ஸ்ரீ:

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

# ஒரு உபநிஷத் வாக்யத்தின் அர்த்த விசாரம்.

(ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர்.)

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் நாலாவது அத்யாயம் நாலாவது ப்ராஹ்மணத்தில் பின்வருமாறு வாக்யங்கள் காணப்படுகின்றன.

‘‘𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌜𑌾𑌯𑌾𑌯𑌾𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌜𑌾𑌯𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌜𑌾𑌯𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌵𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿—𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿। ’’

இந்த வாக்யங்களின் அர்த்தமெது வென்பதை விசாரிப்போம். யதா ச்ருதமாக அர்த்தம் செய்யும் பக்ஷத்தில், ‘பத்நிக்கு பதியானவன் ப்ரியனாக இருப்பது அந்தப் பதியின் இஷ்டத்திற்காகவன்று; ஆனால் தனது இஷ்டத்திற்காகவே’ என்பது தான் அர்த்தமென்று தோன்றும். லோகாநுபவத்தைப் பார்த்தாலும், பதி பத்நிக்கு ப்ரியனாக இருப்பதும், பிள்ளை தகப்பனுக்கு ப்ரியனாக இருப்பதும் இம்மாதிரியானவையெல்லாம் ஆத்ம த்ருப்தியை உத்தேசித்தே என்பது ஏற்படும். தாய் தனது சிசுவினிடத்தில் வைக்கும் வாத்ஸல்யம் முதலானது அப்படிப்பட்டது அன்று என்று ஆக்ஷேபிக்கக் கூடும். உண்மையாகவே சிற்சில ஸ்தலங்களில் ஆத்ம த்ருப்தியைக் கருதாமலே சிலர் மற்றவர்களிடம் ப்ரீதி செய்வது உண்டு. அவ்விடங்களிலும், நமது ஜ்ஞாநமின்றிக்கே ஒரு ஆத்ம லாப விஷயகமான எண்ணம் நமது உள்ளில் இருந்துகொண்டு நம்மை அவ்விதம் ப்ரீதி செய்யும்படித் தூண்டுகின்றது என்று சில பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இந்த ஜந்மம் ஸம்பந்தப்பட்ட வரையில் நாம் செய்யும் ப்ரீதி நிஷ்காரணமாகத் தோன்றின போதிலும், ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தால் நாம் அம்மாதிரி அநேக ஸமயங்களில் ப்ரவ்ருத்திக்கிறோமென்று மஹா கவி காளிதாஸன் முதலானவர்கள்

‘‘𑌰𑌮𑍍𑌯𑌾𑌣𑌿 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑌧𑍁𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍍
𑌪𑌰𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑍁𑌕𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌯𑌤𑍍𑌸𑍁𑌖𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 ॥
𑌤𑌚𑍍𑌚𑍇𑌤𑌸𑌾 𑌸𑍍𑌮𑌰𑌤𑌿 𑌨𑍂𑌨𑌮𑌬𑍋𑌧𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌣𑌿 𑌜𑌨𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍌𑌹𑍃𑌦𑌾𑌨𑌿 ॥’’

இத்யாதி வாக்யங்களால் சொல்லியிருக்கிறார்கள். எது எப்படியிருந்த போதிலும், ஸ்வ ப்ரயோஜநமே மநுஷ்யனுடைய ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் ஹேது வென்பதில் ஆக்ஷேபமில்லை. ஒருவனுக்கும் ஸ்வாத்மாவைக் காட்டிலும் ஸ்வத: ப்ரியமானவேறு வஸ்து இல்லை யன்றோ? இந்த அர்த்தத்தையே இந்த ச்ருதி வாக்யங்கள் மிக்க ரஸத்துடன் அழகான நடையில் வற்புறுத்துகின்றனவென்று சொல்லலாம். இந்த வாக்யங்களில் 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 என்பதற்கு ‘ப்ராஹ்மணன்’ என்றும், 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 என்பதற்கு ‘க்ஷத்ரியன்’ என்றும், ‘𑌲𑍋𑌕𑌾𑌃’ என்பதற்கு ‘ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள்’ என்றும், ‘𑌦𑍇𑌵𑌾𑌃’ என்பதற்கு ‘உபாஸ்ய தேவதைகள்’ என்றும் பொருள் கொள்ள வேண்டும். பணத்தின் மீது ப்ரீதி செய்வது பணத்தின் ப்ரீதியை ‘உத்தேசித்தன்று’ என்னுமிடத்தில், பணத்திற்கு ப்ரீதி அஸம்பாவிதமானதால், ‘அப்படி அதற்கு ப்ரீதி ஸம்பவித்த போதிலும் அந்த ப்ரீதியை உத்தேசித்து நாம் அதன்மீது ப்ரீதி செய்யவில்லை’ என்று அர்த்தம் செய்ய வேண்டும்.

ஆனால், நமது பாஷ்யகாரர்கள் இந்த ச்ருதி வாக்யங்களுக்கு இவ்விதம் அர்த்தம் செய்யவில்லை. அவர்கள் செய்யும் அர்த்தம் என்னவென்றால்:—‘𑌪𑌤𑍍𑌯𑍁𑌃’—‘பதியினுடைய’, ‘𑌕𑌾𑌮𑌾𑌯’—ஸங்கல்ப பலமாக, ‘𑌪𑌤𑌿𑌃’—கணவன் ‘𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌨 𑌭𑌵𑌤𑌿’—ப்ரியனாகிறானில்லை; ‘𑌤𑍁’—ஆனால், ‘𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯’ —பரமாத்மாவினுடைய ஸங்கல்பத்தின் பல

மாகவே, 'ப்ரியோ பவதி'—ப்ரியனாகிறான். அதாவது, 'பதியானவன், தான் தனது பத்நிக்கு ப்ரியனாக வேண்டுமென்று ஸங்கல்பித்த போதிலும், அந்தக் காரணத்தால் அவன் அவளுக்கு ப்ரியனாகிறானில்லை; பரமாத்மாவின் ஸங்கல்பத்தின் பலமாகவே அவன் அவளுக்கு ப்ரியனாகிறான்' என்று சொன்னதாயிற்று. பரமாத்மா நமது கர்மங்களால் ஆராதிதனாகக் கொண்டு அந்தந்தக் கர்மாநுகுணமாக ஆராதகர்களான நமக்கு ப்ரியத்தை உண்டுபண்ணுகிறான் என்பதன்றோ நமது ஸித்தாந்தம்? லோகத்தில் ஒரு வஸ்துவையும் ஸ்வத: ப்ரியமென்றாவது, ஸ்வத: அப்ரிய மென்றாவது சொல்வது ஸாத்யமில்லை. எது நமக்கு ஒரு காலத்தில் ப்ரீதியின் பொருட்டு ஆகின்றதோ, அதுவே மற்றொரு காலத்தில் அப்ரீதியின் பொருட்டு ஆகின்றது; எது ஒரு ஸமயத்தில் கோப காரணமாகின்றதோ, அதுவே மற்றொரு ஸமயத்தில் ஸந்தோஷ ஜநகமாகின்றது. ஆகையால், ஸ்வபாவத்தால் துக்காத்மகமென்றும் ஸுகாத்மக மென்றும் ஒரு வஸ்துவுமில்லை. இந்த அர்த்தத்தைப் பகவாந் பராசரர்,

"ததேவ ப்ரீதயே பூத்வா புநர் து:காய ஜாயதே।
ததேவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே।
தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்॥"

என்று விவரித்திருக்கிறார். இது உண்மையானால், நமக்கு பத்நீ புத்ரர் முதலானவர்கள் ப்ரியர்களாக இருப்பதெல்லாம் பரமாத்மாவின் ஸங்கல்பமே தவிர, வஸ்து ஸ்வபாவத்தாலாவது நமது ஸங்கல்பத்தாலாவது இல்லை என்பது நிச்சயம்.

'ஏன் இந்த வாக்யங்களுக்கு இவ்விதம் க்லிஷ்டமாக அர்த்தம் செய்ய வேண்டும்? ஸ்வாரஸ்யமாகவும் லோகாநுபவத்திற்கு ஒத்ததுமான அர்த்தத்தைப் பரித்யஜிப்பானேன்?' என்று ஒரு ப்ரச்நம் கேட்கலாம். வாக்யங்களுக்கு அர்த்தம் சொல்லும் விஷயத்தில் ப்ரகரணமும் ஒரு முக்யமான அம்சம். 'எந்த ஸந்தர்ப்பத்தில் நாம் அர்த்தம் சொல்லப்போகும் வாக்யம் காணப்படுகின்றது? முன் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் எது? பின் சொல்லப் படப் போவது எது?' இத்யாதியான அம்சங்களை விசாரித்து அவைகளுக்கு ஒத்து அர்த்தம் செய்வதுதான் உசிதமான மார்க்கம். ப்ரக்ருத ச்ருதி வாக்யங்கள் எந்த ஸந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்பதைச் சற்று கவனிப்போம்.

யாஜ்ஞவல்க்யர் என்னும் மஹா யோகிக்கு காத்யாயநி என்றும் மைத்ரேயி என்றும் இரண்டு பத்நிகள் இருந்தார்கள். அந்த யோகி ஒரு ஸமயத்தில் தாம் ஸந்யாஸம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணி, தமது பார்யைகள் இருவரும் பரஸ்பரம் கலஹம் செய்துகொள்ளாமல் வர்த்தித்து வரும் பொருட்டு, அவர்களுக்குத் தமது சொத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டி, மைத்ரேயியைக் கூப்பிட்டுத் தமது அபிப்ராயத்தை வெளியிட்டார். அப்பொழுது மைத்ரேயி, 'ஹே ஸ்வாமிந்! எனக்கு வித்தம் வேண்டாம்; இந்த ஸம்ஸாரத்திலிருந்து எனக்கு எப்படி விமோசநம் கிடைக்குமோ அந்த மார்க்கத்தை எனக்கு உபதேசித்தருளவேண்டும்' என்று ப்ரார்த்தித்தாள். யாஜ்ஞவல்க்யர் அந்த ப்ரார்த்தனையால் த்ருப்தி அடைந்தவராய் அவளை அழைத்து உட்காரச் சொல்லி, 'அம்ருதத்வோபாயத்தைச் சொல்லுகிறேன்; நான் சொல்லப் போகும் வாக்யங்களைக் கவனித்துக் கேட்டு அவைகளின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு நான் சொல்லுகிறபடி செய்ய வேண்டும் (வ்யாசக்ஷாணஸ்ய து மே நிதித்யாஸஸ்வ)' என்று சொல்லிவிட்டு, உடனே ப்ரக்ருத வாக்யங்களைச் சொல்லுகிறார். ஆகையால், இந்த வாக்யங்கள் மோக்ஷஸாதநோபதேசத்திற்கு உபயோகிகளாக இருத்தல் வேண்டும். இவைகளின் யதா ச்ருதமான அர்த்தத்திற்கும் மோக்ஷோபாயத்திற்கும் எவ்வித ஸம்பந்தமு மில்லையாதலால் வேறு அர்த்தம் சொல்ல வேண்டியது அவச்யமாகின்றது. தவிரவும், இந்த வாக்யங்களைச் சொல்லி முடித்தவுடன், யாஜ்ஞவல்க்யர்,

"ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:"

என்னும் வாக்யத்தைச் சொல்லுகிறார். இதன் அர்த்தமாவது, 'ஆத்மாவை நீ தர்சிக்க வேண்டும். அதற்கு உபாயம் அதன் ச்ரவணம், அதன் மநநம், அதன் நிதித்யாஸநம் என்பதுதான். முடிவிலும் 'ஏதாவதரே கலு அம்ருதத்வம்' (இவ்வளவு தான் அம்ருதத்வம் என்று உபஸம்ஹரிக்கிறார். இப்படி அம்ருதத்வ ஸாதநத்தை அறிய வேண்டும் என்னும் உபக்ரமமும், அதே மாதிரியான உபஸம்ஹாரமும், நடுவில் அம்ருதத்வ ஸாதநமாகிற ஆத்ம தர்சநத்தின் கீர்த்தநமும், ப்ரகரணம் பரமாத்ம விஷயம் என்பதை விளக்குகின்றன. 'அம்ருதத்வ ஸாதநத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்' என்னும் ப்ரார்த்தனைக்கும் 'ஆத்மாவைத் தர்சநம் செய்யவேண்டும்' என்னும் ஸமாதாநத்திற்கும் நடுவில், 'லோகத்தில் ஒருவன் பத்நீ புத்ராதிகளிடம் ப்ரியம் செய்வதெல்லாம் ஸ்வப்ரயோஜநத்தை உத்தேசித்தே' என்று ப்ரஸ்தாவிப்பது அத்யந்தம் அஸங்கதமாகுமன்றோ? தவிரவும், 'ஆத்மநஸ்து காமாய' என்று 'ஆத்ம' சப்தத்தைப் பத்து வாக்யங்களில் ஒரு அர்த்தத்தில் ப்ரயோகித்துவிட்டு, அடுத்துவரும் வாக்யத்தில் அதே

'ஆத்ம' சப்தம் 'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:' என்று ப்ரயோகிக்கப்பட்டிருந்தால், இந்த 'ஆத்ம' சப்தத்திற்கு முன் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தத்தைக் காட்டிலும் வேறு அர்த்தம் சொல்வது உபபந்நமாகுமா? யதா ச்ருதமான அர்த்தத்தில், 'ஸ்வப்ரயோஜநத்திற்காக' என்று 'ஆத்மந: காமாய' என்பதற்குப் பொருள் ஏற்படுகின்றது; அதே அர்த்தத்தை 'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:' என்னுமிடத்திலும் சொல்வது ஸாத்யமில்லை. ஸ்ரீபாஷ்யகாரர்கள் சொல்லும் அர்த்தத்தில், இரண்டு இடங்களிலும் 'ஆத்ம' என்னும் சப்தம் பரமாத்மாவைக் குறிக்கிறபடியால் இதுவே ஸங்கதமான அர்த்தம் என்பது வ்யக்தம்.

'அப்படி ஒரே அர்த்தம் சொல்லும்பொழுது இரண்டு வாக்யங்களுக்கும் ஸங்கதி எப்படி ஏற்படுகின்றது?' என்று கேட்கலாம். 'பதி பத்நீ புத்ரன் முதலானவர்களெல்லாரும் எந்தப் பரமாத்மாவின் ஸங்கல்ப பலமாக நமக்கு ப்ரியர்களாகிறார்களோ, அப்படிப்பட்ட பரமாத்மாவின் ப்ரஸாதத்தை உத்தேசித்து அவனை நீ தர்சநம் செய்ய வேண்டும்' என்பது தான் இரண்டு வாக்யங்களுக்குமுள்ள ஸம்பந்தம். 'அந்தப் பரமாத்மா நீ செய்யும் தர்சநத்தால் ப்ரஸந்நனாகி, ஸகல வஸ்துக்களையும் தனது ஸங்கல்பத்தால் உனக்கு அதிமாத்ரம் ப்ரியங்களாகச் செய்ய சக்தன்' என்பது கருத்து. ஸம்ஸார பந்தம்விட்டு மோக்ஷம் பெற்ற பிறகு அப்படி முக்தனான ஜீவனுக்கு ஸகலமும் அதிமாத்ரம் ப்ரியங்களாகின்றன வென்று

"ந பச்யோ ம்ருத்யும் பச்யதி ந ரோகம் நோத து:கதாம்"

என்னும் ச்ருதி வாக்யங்கள் சொல்லுகிறபடியால், அந்தப் பரமாத்ம தர்சநம் மோக்ஷ ஸாதநம் என்பதும் வ்யக்தம். இவ்விடத்தில் சொல்லப்படும் பரமாத்ம தர்சநம் என்பது, தர்சந ஸமாநாகாரமான தெளிந்த ஜ்ஞாநத்தையும் அதனால் ஏற்படும் த்யாநத்தையும் குறிக்கின்றது.

"க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே ।"

என்று சொல்லுமிடத்திற் போல இவ்விடத்திலும் மோக்ஷத்திற்கு அவ்யவஹிதமான ஹேது சொல்லப்படுகிறபடியால், அந்தத் தர்சநம் த்யாநத்தையே குறிக்கவேண்டும் என்பதும் ஸித்தம்.

"ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:"

என்பது ச்ருதி வாக்யம்.

தவிர, இந்த ப்ரகரணத்திலேயே இந்த அர்த்தத்திற்கு ஸாதகங்களான வேறு வாக்யங்களும் காணப்படுகின்றன.



"இதம் மஹத்பூதமநந்தமபாரம்"

(இந்தப் பெரிய பூதம் முடிவில்லாதது, இது கரையில்லாதது) என்பதும்

"இதம் ஸர்வம் யதயமாத்மா"

(சேதந வஸ்து அசேதந வஸ்து இந்த இரண்டும் சேர்ந்த ப்ரபஞ்சம் தான் இங்கு ஆத்மா வென்று சொல்லப்படுகின்றது) என்பதும் இன்னும் இவை போன்ற பல வாக்யங்களும், இந்த விடத்தில் 'ஆத்மா' என்னும் சப்தம் பரமாத்ம விஷயமென்பதை வற்புறுத்துகின்றன.

ஆனால், இதே ப்ரகரணத்தில் தென்படும் வேறு சில வாக்யங்கள், இப்படி பரமாத்ம பரமாக அர்த்தம் சொல்வதற்குப் பாதகம் போலத் தோன்றும். "விஜ்ஞாந கந ஏவைதேப்யோ பூதேப்யஸ் ஸமுத்தாய தாந்யேவாநுவிநச்யதி" என்பதும், "ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி" என்பதும் அம்மாதிரியான வாக்யங்கள். இவைகளின் யதா ச்ருதமான அர்த்தமென்னவென்றால், 'பரமாத்மாவானவன், விஜ்ஞாநம் என்று சொல்லப்படும் ஜீவனாகவே, அவனுடன் பஞ்ச பூதமயமான ஒரு சரீரத்தை எடுத்து அந்தப் பூதங்களுடன் தானும் நசிக்கிறான்' என்பதும், 'இறப்புக்குப் பிறகு நினைவு என்பது இல்லை' என்பதுமே. இப்படிப் பரமாத்மாவைப் பற்றிச் சொல்வது கூடுமோ? என்று கேட்கலாம். இதற்கு ஸமாதாநம். 'விஜ்ஞாந கந ஏவ' என்பதற்கு 'ஜீவனாகவே' என்பது அர்த்தமானாலும், 'தத்த்வமஸி' போன்ற ஸ்தலங்களில் அபேதமாய்ச் சொல்வது போல், இவ்விடத்திலும் அபேதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அப்படிச் சொல்வதற்கு 'விஜ்ஞாநம் என்னும் ஜீவனைச் சரீரமாகக்கொண்டு,' என்று தாத்பர்யம் கொள்ள வேண்டும் என்றும் நமது பாஷ்யகாரர் விவரித்திருக்கிறார். பரமாத்மா, ஜீவாத்மாவுக்கு ஸம்ஸார தசையிலும் மோக்ஷ தசையிலும் அந்தர்யாமியாக இருப்பதால் ஜீவனுடன் அவன் பிறக்கிறானென்றும் அவனுடன் நசிக்கிறானென்றும் சொல்வதில் எவ்வித அநுபபத்தியுமில்லை. ஜீவாத்மாவுக்குப் பிறப்பும் இறப்பும், தேஹ ஸம்பந்தம் ஏற்படுவதும் அது அற்றுப் போவதுமே; அந்த ஜீவாத்மாவுக்கு அந்தர்யாமியாக இருக்கும் பரமாத்மாவுக்கும் அந்தத் தேஹ ஸம்பந்தத்தின் ஸம்பவமும் விலக்கும் ஏற்படுமன்றோ? 'இறப்புக்குப் பிறகு நினைவு இல்லை' என்பதன் தாத்பர்யமும், 'ஆத்யந்திகமாக ஸம்ஸார பந்தம் விட்டு மோக்ஷம் ப்ராப்தமான பின்பு, தனக்கு ஸம்ஸார தசையில் ஏற்பட்டிருந்த தேஹாத்ம ப்ரமம் முதலிய ப்ரமங்கள் இல்லை' என்பதே. 'ஸம்ஜ்ஞா' என்பதற்கு சேர்ந்த

'ஜ்ஞாகம்', அதாவது, 'தேஹத்தையும் ஆத்மாவையும் ஒன்றாக நினைக்கும் 'ஜ்ஞாகம்' என்று ஸ்ரீபாஷ்யகாரர் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்.

இப்படி அர்த்தம் சொல்வதெல்லாம் கொஞ்சம் க்லிஷ்டமே. ஆனால், இப்படி அர்த்தம் செய்வதால் எல்லா வாக்யங்களும் அந்வயித்து ஒருவித ஸங்கதமான பொருள் ஏற்படுகிறபடியாலும், இப்படி அர்த்தம் சொல்லாவிடில் பூர்வாபர விரோதமும் அஸாங்கத்யமும் ஏற்படுமாதலாலும், இந்த க்லேசத்தை ஸஹ்யமென்றே பெரியோர்கள் சொல்வார்கள். ஸ்ரீ ராமாநுஜாசார்யர் மாத்ரமின்றிக்கே, ஸ்ரீ சங்கராசார்யரும் இந்த ப்ரகரணம் முழுவதையும், கீழ்ச் சொல்லப்பட்டவை போன்ற யுக்திகளைக் கொண்டு, பரமாத்ம பரமாகவே அர்த்தம் செய்திருக்கிறார். உண்மையாகவே ச்ருதியின் தத்வார்த்தத்தைத் தேடுமவர்களெல்லாருக்கும் ஸகல வாக்யங்களும் ஸப்ரயோஜநங்களாகும் மார்க்கத்தைத் தேடுவதே தாத்பர்யமான மார்க்கமாகும்; சில வாக்யங்களைப் பரித்யஜித்து சிலவற்றை மாத்ரம் பரிக்ரஹிப்பது தாத்பர்யமாக மாட்டாது.

ஸ்ரீ:

# சகுந பலம்.

('ஆர்யமத ஸம்வர்த்தநீ' என்னும் பத்ரிகையிலிருந்து ஸங்க்ரஹிக்கப்பட்டது,

---

ஊழ்வினை காரணமா யுலகிற்பிறந்த உயிர்களுள் மனிதப்பிறவியே மிக்க மேலானதெனச் சுருதி யுக்தி அநுபவங்களாற் றெள்ளிதிற் புலனாகின்றது. ஏனெனில் ஏனைய உயிர்கட் கில்லாதபடி இம்மனிதப் பிறவியில் அறிவும், அறிவு கொளுத்தும் ஆசிரியனும், அவராற் கையாளப்பெறும் அருமைபெருமை தங்கிய பல நூற்களும் உயிர்த்துணையா யிருத்தலே அதன் காரணமாகும். இத்தகைய பெருமை வாய்ந்த இப்பிறவியை யடைந்த மனிதர் யாவரும் அம்மூவகை உதவியைக்கொண்டு இம்மையிலும், மறுமையிலும் பற்பல வழியிலும் சுகம் பெறுவதற்குப் போதிய திறன் படைத்தவ ராகின்றனர் என்பது வெள்ளிடைமலை. அவ்விதம் மனித வர்க்கத்திற்கு உதவிபுரிந்து அவர்களைச் சுகம் பெறுவிக்கும் நூற்களுள் சோதிட நூற்களே தலைபெற்று விளங்குகின்றன வென்பதிற் சற்று மையமுண்டோ?

ஆனால் தற்காலம் நமது பாரத புண்ணிய பூமியிலுள்ள புனிதமான கல்வியையே அடியோடொழித்து அடிமைத்தனத்திற் காளாக்கும் ஏனைய போலி வித்யையைக் கற்ற சிலர், தாம் கற்ற கல்வி காரணமாய் மனிதப் பிறவிக்



கின்றியமையாத சோதிட நூற்களைப் பலவாறு தம் மனம் போனவாறெல்லாம் இகழ்ந்து பேசியும் எழுதியும் வரத் தலைப்பட்டிருக்கின்றனர். ஆயினும், இவர் இவ்விதம் இகழ்ந்து பேசுவதைக் கொண்டும், எழுதுவதைக் கொண்டும் மிக்கமிக்கப் புனிதமானதும், மிக்க மிக்க அநுபவத்திற் கொத்துவரும் விஷயத்தை யுபதேசிப்பதுமான இந்த சோதிட நூற்களின் உண்மையான பெருமை பெருகி வருமேயொழிய ஒருபொழுதும் குன்றி விடாதென்பதை மட்டும் யாம் கூசாமற் கூறுவோம். ஆனால் இவ்விதம் சொல்வோரை ஒன்று கேட்கிறோம். அதாவது:—நீவிர் மஹர்ஷிகளா லியற்றப் பெற்ற நூற்களை நன்கு படித்து, அதன் கருத்தறிந்து, அக்கருத்துக்கிசைய அதை அநுபவத்திற் பொருத்தி என்றேனும் பார்த்ததுண்டா? இனியேனும் பார்ப்பதாக உத்தேசமுண்டா? என்பதாம். ஆனால் சிலர் இவ்விதம் கூறுவதற்குத் தக்க காரணமில்லாமலு மிருக்கவில்லை. அதாவது:—தற்காலம் சோதிட வித்வான்கள் என்பவருட் சிலர், மேற்சொன்ன மஹான்களின் நூற்களை இன்னதென்று கனவிலும் கண்டறியாதவர்களாய், தம் மனம் போனவாறு ஜாதகம், சகுனம் முதலியவற்றின் பலனைச் சொல்லுவதும், அவ்விதம் அவர் சொல்லுவது அநுபவத்தில் ஒத்துவாரா திருத்தலும், அத்தகைய போலி சோதிட வித்வான்களை அண்டித் தனது எதிர்கால பலனை அவர்களிடம் கேட்டு அது அநுபவத்தில் நடைபெறா திருப்பதைக் கொண்டு உலகிற் பலர் பலவாறு மனச்சோர் வடைதலைக் காண்பதுமே அதன் காரணமாகும் என நாம் ஒருவாறு எண்ணுகிறோம். இத்தகைய சோதிட சாஸ்திரப் பயிற்சி பெற்றவரிடம் கேட்கப்படும் தமது எதிர்கால பலன் அநுபவத்தில் நன்கே ஒத்துவருமாதலால்: முற்கூறிய மேதாவிகளும் கூட நமது புனிதமான சோதிட சாஸ்திரத்தை இகழ்ந்து பேசவோ எழுதவோ இனி முன் வரமாட்டார் என்பது மட்டும் நிச்சயம். மேலும்,

"விஹஸ்தாந்யாநி ஶாஸ்த்ராணி விவாதஸ்தேஷு கேவலம் ।
ப்ரத்யக்ஷம் ஜ்யோதிஷம் ஶாஸ்த்ரம் சந்த்ரார்கௌ யத்ர ஸாக்ஷிணௌ ॥"

[வேறு சாஸ்திரங்கள் இதுபோன்று கண்கூடான பயனைப் போதிப்பனவல்ல அவ்விஷயங்களில் சண்டையிடுவது மட்டுந்தான் மீதமாகின்றது. சோதிட சாஸ்திரமோவெனில் கண் கூடான பயனை யுபதேசிக்கின்றது. இவ் விஷயத்தில் மதியும், கதிரவனும் ஸாக்ஷிகளாவர்] எனப் பெரியோர் உபதேசித்து மிருக்கின்றனர். ஆகவே, கண் கூடான பலனை யுபதேசிக்கும் சோதிட நூற்களுள் சகுனத்தைப் பற்றிக் கூறும் இந்த நூலானது, மிக்க மிக்க ஒவ்வொரு நாளும் அநுபவத்திற் காணும் விஷயத்தை யுபதேசிப்பதால், எவரும் இதைப் படித்தறிந்து இதன் உதவியால் தமக்கு எதிர் காலத்தில் நிகழும் பலன்களை நன்கறிந்து அதற்குத் தக்கபடி நடந்து, இம்மை க்ஷேம லாபங்களை அடைய முயலுவார்களென்று எண்ணுகிறோம்.

'வருவன வந்தே தீருமாதலால் அவ் விஷயத்தில் சோதிட சாஸ்திரம் எதற்கு?' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யக்கூடும். அதற்கு ஸமாதாநமாக நாம் ஒன்றை மட்டும் இவரைக் கேட்டுக் கொள்ளுகிறோம். அதாவது: இந்த சகுன விஷயமாக இந்திரன், சுக்ராசாரியர், ப்ருஹஸ்பதி, கபிலர், ரிஷபர், பாகுரி, தேவலர்,

பாரத்வாஜர், அவந்தி தேசத்தி லுதித்தவரும் மஹா ராஜாதிராஜனுமான திரவ்ய வர்தனன், சர்க்கர் முதலிய மஹான்களும் அவர்களின் நூற்களைத் தழுவி, இந்து தேசத்திலுள்ள மூன்று ரத்னங்கள் எனப் போற்றப்படுவோருள் ஒருவரான ஸ்ரீவராஹ மிஹிராசாரியரும், உலகில் சகுனமூலமாய் நாம் அறிந்து கொள்ளக்கூடிய அபூர்வ விஷய மிருப்பதாகவே எண்ணிச் சகுன விஷயமானதொரு சாஸ்திரத்தை எழுதி யிருக்கும் பொழுது, ஒவ்வொரு மனிதனும் அந்நூலை ஆராய்ந்தறிந்து அதில் ஏதேனு முண்மை யிருக்கின்றதா? இல்லையா? என் அனுபவத்திற் பொருத்திக் கண்டறிய வேண்டுவது அவசியமாகி விடவில்லையா? என்பதாம்.

மேலும், ஆண்டவனாற் படைக்கப்பட்ட சேதனாசேதன ரூபமான இம்மனித உலகில் ஒவ்வொரு வஸ்துவிலும் இயற்கையாகவே பற்பல சேஷ்டைக ளிருப்பதைக் காண்கிறோம். இயற்கையி லமைந்துள்ள இவற்றின் சேஷ்டைகளுள் ஒன்றின் சேஷ்டை (செய்கை)யானது மற்றொன்றிற்குத் தனது வாழ்நாளில் தனது ஊழ்வினைமூலம் நேரும் சுபாசுப பலன்களைத் தெரிந்து கொள்ளுவதற்கு உதவியாகவிருக்கும்படியே ஆண்டவன் அவற்றிற்கு அவ்வித சேஷ்டையை இயற்கையி லமைத்திருக்கிறான் என்றும் கொள்ள வேண்டுவது அவசியமாகிறது. ஆனால் எதன் சேஷ்டையானது எந்த தேசத்தில், எந்த காலத்தில் எவ்விதம் உண்டானால் அதனால் எவற்றிற்குப் பின்னர் வரும் எந்த பலன் எப்பொழுது எம்மாதிரி வரும்? என்றாலோ அதைத்தான் இந்தச் சாஸ்திரமானது உபதேசிக்கின்றதுபற்றி இது இயற்கையில் மற்றெல்லா சாஸ்திரங்களைக் காட்டிலும் மேலானதாகவேதான் ஏற்படுகிறது. மேலும் சித் என்றும் ஜடம் என்றும் கூறப்படும் இவ்விரண்டு பதார்த்தங்களுள் ஜடமான வஸ்துக்கள் யாவும் சித்தான சேதன வஸ்துவிலேயே நின்று அதனாலேயே ஆட்டிவைக்கவும் படுகின்றது என்று கூறும் வேதாந்தங்களை நாம் ஒப்புவோமானால், ஒரு ஜடவஸ்துவின் சேஷ்டையானது மற்றொன்றிற்கு நேரப்போவதைத் தெரிவிப்பதாக ஆகின்றது. இதுவேதான் சகுனம் எனப்படும் என்று கூறும் இந்த சாஸ்திரத்தையும் நாம் நம்பவேண்டியவர்களாகவே தானாகிறோம். இதில் யாதும் ஐயமில்லை.

ஆனால் உலகில் சிலர் சோதிடம் பார்ப்பதும், சகுனம் பார்ப்பதும் வீண் பயத்தையே உண்டாக்கி, எவனையும் எக் காரியத்திலும் தைரியமாய்ப் பிரவிருத்திக்கச் செய்யாமல் வீணில் சோம்பேறிகளாக ஆக்கக்கூடுமாதலால், இதுபோன்ற சாஸ்திரங்கள் அனாவசியமெனச்சொல்லுகின்றனர். ஆயினும் அதனுண்மை இவர் நினைக்கிறபடியில்லை என்பதே எமது துணிபு. அதாவது:- சோதிடமோ சகுனமோ ஒருவனுக்கு ஒன்றைக் கட்டாயப்படுத்திக் கொடுக்கக் கூடியதல்ல. பின்னையோவெனில், இயற்கையாகப் பின்னர் நிகழக் கூடியதை முன்னர் தெரிவிக்கமட்டும் செய்கின்றது. அவ்விதம் சோதிடம் சகுனம் இவற்றால் தெரிவிக்கப்படுவது சுபமானால் தைரியமாக பிரவிருத்தி செய்யவும், அசுபமானால் 'எச்சரிக்கை செய்யப்பட்டோம்' என வெண்ணி அதற்குத் தக்கபடி கூடியவரை முன் ஜாக்கிரதையுடன் நாம் நடக்கவும் இதன் மூலம் உதவி யேற்படுவதால் சோதிடம் சகுனம் இவற்றை அறியாதவன் சோம்பேறி யாகின்றானே யொழிய இவற்றை அறிந்தவன் ஒரு பொழுதும் சோம்பேறியாக ஆகமாட்டான் என்பது மட்டும் நிச்சயம்.



'அங்ஙனமாயின் இவ்வுலகில் மேற்றேயத்தி லுள்ளவர்கள் கீழ்த்தேயத்தவர் போன்று இம்மாதிரியான ஸமாசாரங்களை நம்புவதுமில்லை; நம்பாததால் அவர்க்கு ஒருவிதக் குறைவும் ஏற்பட்டிருப்பதாக அனுபவத்தில் காணப்படவுமில்லை. இவ்வித மிருக்க, அனாவசியமாக நாம் மட்டும் ஏன் இதைப் படித்துப் பொழுதைப் போக்க வேண்டும்?' எனின், இதற்கு இரண்டுவிதமாகப் பதில்கூறுவோம். அவற்றுள் முதலாவது பதில் பின்வருமாறு:- தக்க சான்றாகக் காட்டிய மேற்றேயத்தவரில் பலர், இதுபோன்ற விஷயங்களை யுபதேசிக்கும் நூற்களைப் படித்தறிந்து, அதன் மூலம் பின்னர் வரும் சுபாசுபங்களை யுணர்ந்து, அதற்குத் தக்கபடியேதான் நடக்கின்றனர் என்பதில் யாதும் ஆக்ஷேபமில்லை. மேற்றேயத்தவர் இதை யறிந்து நடக்கின்றனர் என்பது உமக்கு எவ்விதம் தெரியும் என்று கேட்பீரேல் கூறுவோம். நாம் 1926, மே மாதம் ரைட் ஆனரபிள் வீ. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களிடம் பேசியிருந்தபொழுது "மேற்றேயத்தவர்களிலும் ஜாதகம், முதலியவற்றை நம்புகின்றவர்களுண்டென்றும், சட்டசபை முதலிய பெரிய ஸ்தானங்களுக்கு அபேக்ஷகராக நிற்பவரும்கூட சோதிட வித்வான்களை அணுகித் தமக்கு ஜயமுண்டாகுமா? எனக் கேட்டுக் கொள்ளுவதை நேரில் பார்த்திருக்கிறேன்" என்றும் சொல்லியிருக்கின்றனர். ஆகவே நாம் மேலே சொன்னது அனுபவ பூர்வகமான ஆப்த வாக்கியமேயாகும். இரண்டாவது ஸமாதானமாவது:—மேற்றேயத்தவரோ, கீழ்த் தேயத்தவரோ எவரேனும் சரி. ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்துதான் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குகின்றனர் என்பது மட்டும் திண்ணம். அவ்விதம் தாம் எதிர்பார்க்கும் பலன் இன்னின்ன ஸமயத்தில் இம்மாதிரி யுண்டாகும் என ஒருவர் சொல்லி, அது அனுபவத்தில் நடக்கும்பொழுது அவ்விஷயத்தை அவர் எவ்விதம் நம்பாமலிருக்கக்கூடும்? அனுபவத்தில் வருவதையும் ஒருவர் நம்பவில்லை என்றால் அவர் மூடராகவோ அல்லது பைத்தியம் பிடித்தவராகவோ இருக்கவேண்டுமே யொழிய, உண்மையான மேதாவியாக ஒருபொழுது மிருக்க முடியாது. ஆகவே கண்கூடாகக் காணும் எதிர்கால பலனை யுபதேசிக்கும் இதுபோன்ற நூற்களை அவர்களும் படிக்கக் கடமைப்பட்டவர்களாகவே ஆகிவிடுகின்றனர். பரோக்ஷமான ஸ்வர்க்க நரகாதி விஷயங்களை யுபதேசிக்கும் நூற்களை நம்பவில்லை யென்று ஒருவன் ஏதோ சொல்லலாமே யொழிய, கண்கூடாகக் காணும் பலனை யுபதேசிக்கும் இதுபோன்ற நூலை எவரும் நம்பாமலிருக்க முடியாதென்பது மட்டும் திண்ணம்.

ஸ்ரீ:

## புஸ்தக விமர்சம்.

### ஸ்ரீகீதா பாஷ்யத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு.

(திவான் பஹதூர் வி. கே. ராமாநுஜாசார்யர்; ஜநார்தன அச்சாபீஸ் கும்பகோணம் விலை ரூ. 1—4—0.)

ஸ்ரீபகவத் ராமாநுஜனால் ஜகத்தின் நன்மையை உத்தேசித்து எழுதப்பட்டுள்ள ஸ்ரீமத் கீதா பாஷ்யம் என்னும் க்ரந்தத்தை திவான்பஹதூர் ஸ்ரீ. உப. வே. வி. கே. ராமாநுஜாசார்யர் என்னும் ஆஸ்திகர் தமிழில் மொழிபெயர்த்து, அதை அந்தத் தமிழ்

மொழிபெயர்ப்புடன் அச்சுப் பதிப்பித்திருக்கிறார். இப்பொழுது அதில் முதல் ஆறு அத்யாயங்களே வெளி வந்திருக்கின்றன; மற்றவை சீக்ரத்தில் வெளி வருமென்று நாம் அறிகிறோம்.

ஸ்ரீ பகவத்கீதை என்னும் க்ரந்தம், ஸ்ரீவ்யாஸரால் செய்யப்பட்டுள்ள மஹா பாரதத்தின் ஒரு பாகம். இது த்வாபரயுகத்தின் முடிவில் குருக்ஷேத்ரம் என்னும் ஸ்தலத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் ஆரம்பித்தபொழுது, ஸ்ரீ க்ருஷ்ண பகவானால் அர்ஜுனனை வ்யாஜமாகக்கொண்டு ஜகத்தை உத்தேசித்து உபதேசிக்கப்பட்ட தத்வஹித புருஷார்த்தங்கள் அடங்கியுள்ளது. அது எளிதான ஸம்ஸ்க்ருத நடையில் சிறிய ச்லோகங்களாக அமைக்கப்பெற்றிருக்கையிலும், அதன் உட்கருத்து எல்லாராலும் ஸுலபமாக அறியக்கூடாததாகவே இருக்கின்றது. அதைப்படிக்கும் இக்காலத்திய ஐரோப்பிய வித்வான்களுட் பலர் அதன் ஸாராம்சத்தை அறியாதவர்களாய் அதைப்பற்றி விபரீதமாகப் பேசி வருகிறார்கள். அதில் சிற்சில விடங்களில் சிற்சில அரிய பெரிய விஷயங்கள் காணப்பட்ட போதிலும், அவைகளில் எவ்விதத் தொடர்ச்சியும் தென்படவில்லை யென்பதும், முன் பின் விரோதங்களும் புநருக்திகளும் நிறைந்துள்ளன வென்பதும் அவர்களுடைய அபிப்ராயம். நமது தேசத்தில் அதை மஹர்ஷிப்ரோக்தமென்று மிக்க கௌரவத்துடன் ஆதரித்து அதற்கு உரை முதலியவற்றை எழுதியிருக்கும் சில வித்வான்களும், தோஷம் இருப்பது போலத் தோன்றும் ஸ்தலங்களை எவ்வித விசாரத்திற்கும் இடமாக்காமல் அவைகளுக்கு ஒருவித பதவுரையை மாத்ரம் எழுதியிருப்பதை நாம் பார்க்கிறோம். இவ்விதம் பலர் இதைப்பற்றி விருத்தமாக அபிப்ராயப்படும் இதன் உண்மையான அர்த்தத்தை உட்புகுந்து பாராமலும் இருந்துவருகையில், சில வித்வான்கள் மாத்ரம் இதை ஊன்றிப்படித்து இதற்கு முக்யமான விஷயம் ஒன்று தொடர்ந்து இருக்கின்றதென்றும் க்ரந்தத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரையில் அது அநுஸ்யூதமாக விவரிக்கப்பட்டு வருகின்றதென்றும் முன்பின் விரோதம்போலத் தோன்றுமவையெல்லாம் த்ருப்திகரமான ஸமாதானம் சொல்லக்கூடியவையென்றும் பஹுகாலமாக நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த வித்வத் பரம்பரையைச் சேர்ந்தவர்களுள் ஒருவர் இந்தப் பாஷ்யம் எழுதியிருக்கும் ஸ்ரீ பகவத் ராமாநுஜன் என்பவர். அவர்களை ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் விசேஷித்த பகவத் கடாக்ஷம் பெற்ற ஆசார்யர்களென்று கொண்டாடி வருகிறார்கள். அந்த ஆசார்யர்களுள் இந்தக் கீதார்த்தம் பஹுகாலம் வரையில் பெரியதொரு ரஹஸ்யமாகக் குருவினிடமிருந்து சிஷ்யனுக்கு உபதேச வழியாகவே ஸம்ரக்ஷிக்கப்பட்டு வந்தது. சற்றேறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த ஸ்ரீ யாமுநாசார்யர் என்பவர் முதல் முதலில் அந்த அர்த்தத்தை ஒரு புஸ்தக ரூபமாக வெளிப்படுத்தினார். அந்தப் புத்தகத்தின் பெயர் ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம். அது இப்பொழுதும் ப்ரசாரத்தில் இருந்துவருகின்றது. அந்த யாமுநாசார்யருக்குப் பிறகு அவருடைய சிஷ்யரின் சிஷ்யராக வந்த பகவான் ராமாநுஜன் என்பவர், அந்த ஸங்க்ரஹப் புஸ்தகம் ஸாமாந்ய ஜநங்களுக்கு ஸ்ரீ கீதார்த்தத்தை உணர்த்தப் போதாதென்று எண்ணி பாஷ்ய ரூபமான ப்ரஸ்துத க்ரந்தத்தை எழுதினார். அவர் இந்தப் பாஷ்யம் எழுதும் விஷயத்தில் ஸ்ரீ யாமுநாசார்யரால் எழுதப்பட்டுள்ள ஸங்க்ரஹத்தையே முக்ய ஆதாரமாக வைத்துக்கொண்டு அதை எழுதியிருக்கிறார் என்பது அந்தப் பாஷ்யத்தைப் படிப்போர் எல்லாருக்கும் நன்றாக



விளங்கும். அவர் ஸ்ரீயாமுநாசார்யரால் காண்பிக்கப்பட்டுள்ள வழியே போய், ஸ்ரீகீதையின் விஷயம் எப்படி உபக்ரமிக்கப்பட்டு எப்படி உபஸம்ஹரிக்கப்படுகிறதென்றும், ஒரு அத்யாயத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயமும் அதற்கு அடுத்து வரும் அத்யாயத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயமும் எப்படி ஒன்றுடன் மற்றொன்று ஸம்பந்தப்பட்டிருக்கின்றன வென்றும், ஒவ்வொரு ப்ரகரணத்திலும் அங்கங்கு தென்படும் வாக்யங்கள் அந்தந்த ப்ரகரணத்திற்கு ஒட்டி எப்படி அந்வயிக்கப்பட்டு அர்த்தம் சொல்லப்படக் கூடுமென்றும், இவைபோன்ற ஸகல அம்சங்களையும் பூர்ணமாக விசாரித்திருக்கிறார். விசாரத்தில் செல்லும் நோக்கமுள்ள புத்தியை உடைய எல்லாருக்கும், இந்தப் பாஷ்யம், எவ்வித ஸம்சயமும் நீங்குமளவு விசாரத்தைச் செய்கின்றது என்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை. ஆனால் சிற்சில விடங்களில் பகவாந் ராமாநுஜனால் செய்யப்படும் வாக்யார்த்தங்கள் ஸ்வரஸங்களாக இல்லையென்றும், வற்புறுத்த ஸ்ரீயாமுநாசார்யரால் செய்யப்பட்டுள்ள விஷய விபாகத்திற்கு ஒற்றுமையை ஏற்படுத்தும் பொருட்டு இவர் இம்மாதிரி க்லிஷ்டமான அந்வயத்தையும் அர்த்தத்தையும் சொல்லுகிறார் என்றும் சிலர் சங்கிக்கலாம். அப்படிச் சங்கிக்கிறவர்களே, அவ்விடங்களில் ஸ்வாரஸ்யம் போலத் தமக்குத் தோன்றும் அர்த்தங்கள் முன் பின் சொல்லப்பட்டுள்ள விஷயங்களுக்கு ஸங்கதமாகமாட்டா வென்பதையும் நன்றாக அறிவார்கள். ச்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களின் அர்த்தத்தை விசாரிக்க ப்ரவ்ருத்திக்கு மெல்லாரும், முன் பின் விருத்தங்கள் போலத் தோன்றும் வாக்யங்களுக்கு ந்யாயத்தை முன்னிட்டு ஒருவித ஒற்றுமையை ஏற்படுத்துவதையே தமது முக்ய நோக்கமாக உடைத்தாயிருக்க வேண்டுமன்றோ? அந்த நோக்கத்தைக் குறிப்பாக வைத்துக்கொண்டு பகவாந் ராமாநுஜன் இந்தப் பாஷ்யத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கிறார் என்பதை மறக்கக்கூடாது. அப்படி க்லிஷ்டம் போலத் தோன்றும் இடங்களை ஊன்றிப் பார்த்தால், அவர் அந்த க்லேசத்தை ஸமர்த்திக்கும் பொருட்டு எவ்வளவு ச்ரத்தையுடனும் ஆர்ஜவத்துடனும் ந்யாய விசாரம் செய்திருக்கிறார் என்பது நன்கு விளங்கும். இம்மாதிரி ஸ்வல்ப க்லேசம் நடுவில் இருந்தபோதிலும், கடைசியாக நமக்குக் கிடைக்கும் பொருளின் ஒற்றுமையைப் பார்க்கும் பக்ஷத்தில், இந்த க்லேசங்கள் ஸஹ்யங்களே என்று பக்ஷபாதமற்றவர்களெல்லாரும் ஒத்துக் கொள்வார்கள்.

அப்படிக் கிடைக்கும் ஒற்றுமை என்னவென்பதை நாம் இவ்விடத்தில் விசாரிக்க ப்ராப்தமானாலும், அது இப்பொழுது நம்மால் விமர்சிக்கப்படும் தமிழ் மொழிபெயர்ப்பில் நன்றாக விவரிக்கப்பட்டிருக்கிறபடியால், அந்த விசாரத்தையே நாம் திரும்பவும் செய்வது அநாவச்யம் என்று விடுத்தோம். ஸம்ஸ்க்ருதம் அறியாத ஜநங்கள் எல்லாருக்கும் திவான்பகதூர் ராமாநுஜாசார்யார் இம்மொழி பெயர்ப்பால் பெரியதொரு உபகாரம் செய்திருக்கிறார் என்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை.



186788

கேவலம் ஸம்ஸ்க்ருத சப்தங்களுக்குப் பதிலாகத் தமிழ் மொழிகளை வைத்து எழுதும் மொழி பெயர்ப்பைச் சேர்ந்ததன்று; மூல க்ரந்தத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைத் தமிழ் நடையில் தமிழ் அறிந்தவர்களுக்கு எளிதில் புலப்படும்படி எழுதப்படும் உரையைச் சேர்ந்ததென்றே நாம் சொல்வோம். அநேக விடங்களில் பாஷ்யத்தின் கருத்தை விளக்கும் பொருட்டுத் தமிழ்ப் பாஷைக்கு இணங்கும்படி வசன சைலிகளும் அர்த்த க்ரமமும் நிஸ்ஸங்கோசமாக மாற்றப்பட்டிருக்கின்றன. அநேக விடங்களில் பகவான் ராமாநுஜனால் சொல்லப்படாத த்ருஷ்டாந்தங்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் மொழியெர்ப்பு என்னும் பெயருக்கு ஒற்றுமையற்றனவானாலும் பாஷ்யத்தின் அர்த்தத்தைத் தெளிவாய் வெளியிட வேண்டுமென்னும் கருத்துக்கு இவை மிகவும் ஒற்றுமையுள்ளவைகளே. இந்தப் புஸ்தகத்திற்கு ஒரு முகவுரையும் எழுதப்பட்டிருக்கிறது. ஹிந்துமத ஸம்பந்தமான அநேக விஷயங்கள் அதில் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீகீதையின் விஷய விபாகமும் விஸ்தாரமாக அதில் விவரிக்கப்பட்டிருக்கின்றபடியால், இந்த முகவுரையும் மிக்க ப்ரயோஜநமுள்ளதென்றே நாம் நினைக்கிறோம். இப்புத்தகத்தைப் படித்து நாம் அஸாதாரணமான ஆநந்தம் அடைந்தோம்; நமது அபிமானிகளும் அதைப் படித்து அம்மாதிரியான ஆநந்தம் அடைவார்களென்றே நாம் நம்புகிறோம்.

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு:—

---

ஆவணி மாஸத்திய ஸஞ்சிகையில் தாங்கள் எழுதியிருக்கும் ஸமாதானத்தைப் பார்வையிட்டேன். அதில் சில பாகங்களுக்கு அவசியம் பதில் சொல்லவேண்டியிருப்பதால் அதைச் சொல்லிவிட்டு விரதனாகிறேன்.

1. சில அஜ்ஞாதங்களான காரணங்களால் நான் உபாயாந்வேஷணத்தில் தவறிவிட்டதாகச் சொல்லுகிறீர்கள். தாங்களாவது கௌரவமான காரணங்களைக் கொண்டு உபாயாந்வேஷணம் செய்து, வைஷ்ணவ ஸமூஹத்தின் உபகாரார்த்தமாக வெளியிடக் கூடாதா?

2. அப்ராஹ்மண விஷயத்தை நான் ப்ரஸ்தாவிக்காமலிருக்க, அவர்களுடன் ஒற்றுமைக்காக ப்ராஹ்மண தர்மத்தை விடும்படி ப்ரஸங்கிக்குமென்கிறீர்கள். இது தங்களுடைய மனோராஜ்யமே என்று சொல்லக்கூடாதோ?



3. வைதிக கர்மாநுஷ்டானங்களில் வேத வாக்யங்களுக்குப் பதிலாக ப்ரபந்தங்களை உபயோகப்படுத்தவில்லையென்றும், பகவத் குணாநுபவத்திற்கு மாத்ரம் அவற்றை உபயோகப்படுத்துவதாயும் சொல்லுகிறீர்கள். சில கர்மங்களில் வேத வாக்யங்களுக்குப் புறம்பே ப்ரபந்தங்களை நுழைத்திருக்கிறார்கள்; அவைகளை ப்ரத்யேகமாக அத்யயநம்செய்து வருகிறார்களே! இது ஏன்? பகவத்குணாநுபவத்திற்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் யதேஷ்டமாகக் கத்ய பத்யங்களிருக்கத் தமிழைத் தேடிப் போகவேண்டிய அவச்யமென்ன?

4. தமிழ்ப் பாஷை மிக ச்லாக்யமென்றும், அந்தப் பாஷை நடையாடுமிடங்களில் ஜயிக்காததற்காக யாரோ ஒருவர் சோகிப்பதாகவும் சொல்லுகிறீர்கள். நமது பரத கண்டத்துக்குள் அநேக பாஷைகள் ப்ரசாரத்தில் இருந்து வருகின்றன. அவையெல்லாவற்றிலும் சாஸ்த்ரார்த்தத்தை ப்ரதிபாதிக்கும் அநேக க்ரந்தங்களும் பகவத் குணாநுபவத்திற்கு வேண்டிய கத்ய பத்யங்களும் ஏராளமாக இருந்து வருகின்றன. அவைகளில் எதை எதற்கு மேலானதாகச் சொல்லக் கூடும்? அந்தந்தப் பாஷாபிமானிகளிடம் பாஷணம் செய்து பார்த்தாலன்றோ அது தெரிய வரும். தாங்கள் சொல்வது, 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்னும் பழமொழி போலிருக்கிறது. தமிழ்ப் பாஷையிலிருக்கும் ப்ரபந்தங்களுக்கு ப்ராதாந்யம் கொடுத்து விட்டபடியால், அது எல்லாப் பாஷைகளுக்கும் மேலானது என்பதைக் காண்பிக்க வேண்டுமென்னும் அபிப்ராயம் மேலிட்டு ப்ரயத்னப்படுவது போலத் தோன்றுகிறது.

5 ப்ரபந்தங்கள், வேதத்தில் அநதிகாரிகளான ஸ்த்ரீ சூத்ரர்களை உத்தேசித்துச் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். அப்படியானால், வேதத்தில் அதிகாரிகளான வைஷ்ணவ ப்ராஹ்மணர்கள் அவைகளை அத்யயநம் செய்வதேன்? தாங்கள் சொல்வதிலிருந்து, ஒரு ஸமயம் இக்காலத்திய வைஷ்ணவ ப்ராஹ்மணர்கள் வேதத்தில் அநதிகாரிகளாகிவிட்டார்களோ என்று கூட சங்கிக்கவேண்டியிருக்கிறது.

6. ஆகமங்கள் விஷயமாக ஸோமபான ஸுராபானங்களை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகிறீர்கள். இது விஷயத்தில், தங்கள் மனஸ் அபிமான க்ரஸ்தமாகி விட்டதென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. நம்முடையதை நாம் எல்லா விதத்திலும் ச்லாகித்துக் கொள்ளலாம். நம்மால் ச்லாகிக்கப்படுவதைப் போன்ற யோக்யதை பொருந்தினதும், அநேகரால் ச்ரத்தையுடன் அநுஷ்டிக்கப்பட்டு வருவதுமான மற்றொரு ஆகமத்தை அவ்வளவு கடுமையாகத் தூஷிக்கலாகுமோ? அப்படித் தாங்கள் செய்திருப்பதை ஸஹ்ருதயர்கள் ஆமோதிப்பார்களோ? இரண்டு ஆகமங்கள் விஷயமாகவும், வேத வ்யாஸ ப்ரணீதமும் அஷ்டாதச புராணங்களுள் ஒன்றுமாகிய 'சைவம்' என்னும் புராணத்திற் சொல்லியிருப்பதைத் தாங்கள் அறிந்து தெளியும் பொருட்டு இவ்விடத்தில் உதாஹரிக்கிறேன்.

" ஸாம்ப்ராத்ரா ந்ருஸிம்ஹதாது ஸாஷ்டாங்கேஷ்வதிம்ஷகாது ।
ஸாத்ராட்ஸித்ர பரிஸாஹந்தா ஸதூரவெதீதி கத்ஸ்வ:(?) ॥"

7. பாஞ்சராத்ரத்தின் பேரில் தோஷாரோபணம் செய்ததால் அப்படி எழுதும் படி நேரிட்டதென்கிறீர்கள். உலகத்தில் அபிப்ராய பேத மிருப்பது ஸஹஜம். அதற்காக மநஸ் க்ஷோபிகலாமோ? உங்களைப் போன்ற பத்ராதிபர்கள் மநஸ் ஸமாதாநத்துடன் இருந்தாலல்லவோ பர்யாலோசனை செய்யவேண்டும்? பாஞ்சராத்ரம் தங்களுடையதென்று எண்ணி விட்டீர்கள் போலும்! அபிப்ராய பேத மிருந்த போதிலும் வைஷ்ணவர்களாகிய நாம் எல்லோரும் ஒன்று போல் அநுஷ்டித்து வருவதால், நம் எல்லோருக்கும் அதன் குண குணங்களை எடுத்துச் சொல்ல ஸம பாத்யதை உண்டென்பது எப்பொழுதும் தங்கள் ஜ்ஞாபகத்தில் இருக்க வேண்டுமன்றோ?

8. அஹங்காரம் ஹேய மென்கிறீர்கள். அஹங்காரம் என்றால் 'நான்' என்னும் ஓர் எண்ணம். தான் ப்ராஹ்மணன் என்னும் எண்ணம்இருந்தால் மாத்ரமே ப்ராஹ்மணத்வத்தையும் அதன் தர்மத்தையும் காப்பாற்ற முடியும். அவ்வித ஸ்ம்ருதி யில்லாததால்தான் இக்காலத்து ப்ராஹ்மண வாலிபர்கள் ஸ்வதர்மத்தில் உதாஸீநர்களாகி வருகிறார்க ளென்பது கவனிக்கத் தக்கது. தன்னுடைய ஸ்தாநத்தின் மஹிமை அநவரதம் ஜ்ஞாபகத்தில் இருந்து வந்தால் மாத்ரமே தனது கடமையைச் செய்வதில் ஒருவனுக்கு ச்ரத்தை உண்டாகும். ஆதலால் மிதமான அஹங்காரம் ஹேய மாகமாட்டாது. துரபிமாநம் துரஹங்காரம் இவைகளே ஹேயங்களாகும்.

9. கடைசியாக, இவ்வருஷ உபாகர்மாநுஷ்டாநத்தில் வைஷ்ணவர்களுக்குள் பேத மேற்பட்டதாகவும், ஸ்மார்த்தர்களுக்குள் பேதம் ஏற்படாமல் இருந்ததாகவும் சொல்லிச் சோகிக்கிறீர்கள். அதற்குக் காரணம் ஸ்மார்த்தர்களுள் ஸம்ப்ரதாயாநுஷ்டாந பேதங்களில்லாமையே. சில நிஷித்த கர்மங்களைக் கூட ஸம்ப்ரதாய ப்ரயுக்தங்களென்று ஒத்துக்கொள்ளும் வைஷ்ணவர்கள் இந்த உபாகர்ம பேதாநுஷ்டாநத்தையும் ஓர் ஸம்ப்ரதாயாநுஷ்டாந மென்று எண்ணிச் சோகிக்காமல் இருக்கக் கூடாதோ?

நாகபட்டணம்
20-9-28

கே. பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

[இந்த வாதத்தை வளர்த்த இஷ்டமில்லாததால் நாம் இதற்கு எவ்வித ப்ரத்யுத்தரமும் சொல்லாமல் விலகுகிறோம். ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபன்]

ஸ்ரீ:

। ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

யோऽஜ்ஞ: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

பகவத் கீதையின் ச்லாகை.

ஒரு பாச்சாத்யர் நமது கீதையின் பெருமையை ஒத்துக்கொண்டு விட்டார். நமது கீதை மஹா பாரதத்தின் ஒரு முக்யமான பாகமேயாம். மஹாபாரதமும் அநுஸ்யூதமான க்ரந்தம் தானும். கீதையில் விஷய விபாகமும் விஷய ஸங்கதிகளும் ந்யாயத்திற்கு ஒத்தபடியே காணப்படுகின்றனவாம். அதிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களும் மஹா ஜநங்களின் ச்ரேயஸ்ஸை வ்ருத்தி செய்யத்தகுந்தவை என்பதில் ஆக்ஷேப மில்லையாம். இவ்வளவை ஒரு பாச்சாத்ய வித்வாந் அங்கீகரித்து விட்டார்.

" ப்ரஹ்மவாதிநோ வஸிஷ்டோ வாமதேவம் வதந்தி தேவதா: "

என்பது போல நாமும் இம்மாதிரியான அங்கீகாரத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தோம். நமது பரமமான காமம் நிறைவேறிவிட்டது போலும்.

சற்றேறக்குறைய நாற்பது ஐம்பது வர்ஷங்களுக்கு முன் வரையில் பாச்சாத்யர்களெல்லாரும் நம்மைப் பற்றியும் நமது நடை உடை பாவனைகளைப்பற்றியும் மிகவும் ஹீநமாக நினைத்து வந்தார்களென்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். மாக்ஸ் முல்லர் முதலிய சில ஆங்கில வித்வாங்களும், ஜர்மெனி தேசத்தில் இருந்த சில பண்டிதர்களும், நமது ஸம்ஸ்க்ருத பாஷையைக் கொஞ்சம் அப்யஸித்து, அந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களுட் சிலவற்றைப் படித்து, நாம் அவ்வளவு நிஹீநர்களல்லரென்றும் நம்மிடத்திலும் கொஞ்சம் ஜ்ஞாநம் இருக்கின்றதென்றும் வெளியிட்ட பின்பே, ஏற்கெனவே பாச்சாத்யர்களுடைய மநஸ்ஸில் குடி கொண்

டிருந்த கெட்ட எண்ணம் கொஞ்சம் மாறிற்று. நமது பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களில் சில அரிய பெரிய விஷயங்கள் இங்குமங்கும் தென்படுகின்றன வென்றும், ஆனால் அவை சிதிலங்களாகவும் எவ்வித ஆநுபூர்வியு மற்றவையாகவும் இருக்கின்றன வென்றும் அவர்கள் வெளியிட்டார்கள். நம்மால் மிகப் பெரியவையாகக் கொண்டாடப்படும் உபநிஷத், பகவத் கீதை, இதிஹாஸ புராணங்கள் முதலிய க்ரந்தங்களெல்லாம், நமது பெரியோர்களும் கொஞ்சம் விவேகிகளே என்பதற்குப் போதுமான ஸாக்ஷ்யங்களாக இருக்கின்றன வென்றும், ஆனால் அந்த விவேகத்தின் பரிபாகம் அவ்வளவாக முதிர்ந்திருப்பதாய் அவைகளிலிருந்து ஏற்படவில்லை யென்றும், இக்காலத்தில் பாச்சாத்யர்களிடம் காணப்படும் மனோபாவத்தின் காம்பீர்யமும், சிறந்த ஆசார நோக்கங்களும், ஸமர்மகமாக விஷய விசாரம் செய்யும் ஸாமர்த்யமும், நாகரிகமும், நமது பூர்வர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை யென்றும் அவர்கள் வெளியிட்டிருப்பதிலிருந்து ஏற்படும். அவர்கள் அம்மாதிரியான அபிப்ராயம் வெளியிடுவதற்கு, எவ்விதமான ஸம்ஸ்க்ருத பயிற்சியைச் செய்திருந்தாரென்றாவது, நமது தேசத்தியருடைய பரிசயத்தை எவ்வளவு வரையில் செய்திருந்தாரென்றாவது நாம் சொல்லச் சக்தரல்லர். ஆனால், இப்பொழுது நம்மையும் மநுஷ்ய கோஷ்டியில் சேர்ந்தவர்களாகச் சில பாச்சாத்யர் எண்ணி வருவதெல்லாம், அவர்களுடையப் பரிச்ரமத்தின் பலமென்றே நாம் அறிய வேண்டும்.

ப்ராயேண ஜநஸாமாந்யத்தின் நோக்கத்தைப் பரிசீலநம் செய்து பார்த்தால், ‘தமது பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹர்களைக் காட்டிலும் தாமே விவேகிகள், தாமே ஸமர்த்தர்கள்’ என்னும் எண்ணம் எல்லா ஜாதியருக்கும் ஸஹஜம் என்று சொல்லலாம். நமது தேசத்தில் அந்த எண்ணம் கொஞ்சம் விசேஷத்துடன் தென்படுகின்றதென்பதே நமது அநுபவம். இதற்கு முக்யமான காரணம்: நமது பாலர்கள் பால்யத்திலேயே பாச்சாத்யர்களுடைய உத்போதநத்திற்கு உட்பட்டு வருவதே. நமது வேதங்களும் சாஸ்த்ரங்களும் அஸம்பத்த ப்ரலபிதங்களென்றும், நமது பூர்வாசாரங்களெல்லாம் காட்டு ஜநங்களுக்கே உரியவை யென்றும், நமது தர்மாநுஷ்டாநங்களெல்லாம் மௌட்ய விஜ்ரும்பிதங்களென்றுமன்றோ அவர்கள் உபதேசிக்கிறார்கள்? ஏற்கெனவே, தமது முன்னோர்களைக் காட்டிலும் தாமே சிறந்தவர்களென்னும் எண்ணத்தை ஸஹஜமாகக் கொண்டிருக்கும் இந்தப் பாலர்களுக்கு இந்த உபதேசமும் சேரவே, அவர்களுக்கு நமது ஆசாரங்கள் மீதும், நமது ஸநாதந தர்மங்கள் மீதும், நமது பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களின் மீதும், ஒருவித விசேஷித்த லாகவ



புத்தி ஜநிக்க ஆரம்பிக்கின்றது. அதன் பலமாகவே அவர்கள் நமது நடையுடை பாவனைகளிலிருந்து மிக்க ஜுகுப்ஸையுடன் விலகி, பாச்சாத்யர்களுடைய ஆசாரங்களையும் நோக்கங்களையும் அநுஸரிக்க ப்ரயத்நப் படுகிறார்கள். பாச்சாத்யர்களுடைய அபிப்ராயமே அவர்களுக்கு ப்ரமாணமாகிற படியால், நமது க்ரந்தங்களைப் பற்றியும் நமது விவேகம் நாகரிகம் இவைகளைப் பற்றியும் அவர்கள் எவ்வித கௌரவ புத்தியும் செய்யவில்லை. உபநிஷத், கீதை முதலியவைகளை அவர்கள் கொஞ்சமேனும் படிக்காமல் இருக்கையிலும், அவை பூர்வாபர விருத்தங்களென்றும் ஆத்யந்தம் அஸம்பத்தங்களென்றும் அவர்கள் நினைத்திருப்பது எவருக்குத் தெரியாது? இந்த ஸ்திதியில் ஒரு பாச்சாத்ய வித்வாந் நமது க்ரந்தங்களில் பூர்ண குண க்ரஹணம் செய்கிறாரென்றால், அந்தக் குண க்ரஹணத்தை நாம் வஸிஷ்டருடைய வாக்கால் வரும் ப்ரஹ்மர்ஷிப் பட்டம் போல ஏன் கொண்டாடக்கூடாது?

இப்படி நமது க்ரந்தங்களில் பூர்ண குண க்ரஹணம் செய்த பாச்சாத்ய வித்வான், ப்ரொபெஸ்ஸர் அல்ட்ராமூர் (Professor Ultramore) என்று சொல்லப்படும் ஜீநீவா தேசத்தைச் சேர்ந்த வித்வாங்களுள் ஒருவர். சென்ற ஆகஸ்டு மாதக் கடைசியில் லண்டன் பட்டணத்தில் சேர்ந்த ஒரு மஹா வித்வாங்களுடைய ஸதஸ்ஸில் (Orientalists' Conference) இந்த வித்வாந் நமது கீதையைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசினாராம். அந்தக் கீதையின் மீது இதர பாச்சாத்ய வித்வாங்களால் ஆரோபிக்கப்படும் தோஷங்களெல்லாவற்றிற்கும் அவர் ஸமாதாநம் சொல்லியிருப்பதாக நாம் அறிகிறோம். அவரால் செய்யப்பட்ட உபந்யாஸம் இன்னும் இத்தேசத்திற்கு எட்டவில்லை. அவர் அவ்விதம் உபந்யஸித்ததாக மாத்ரம் தந்தி ஸமாசாரம் வந்திருக்கின்றது. ஆகையால் அவரால் செய்யப்பட்டுள்ள ஸமாதாநங்கள் எப்படிப்பட்டவை என்பதை விசாரிக்க நாம் இப்பொழுது அசக்தரே. ஆனால், நமது பாஷ்யகாரர்களுடைய பாஷ்யங்கள் வழி போகாமலும், அந்தப் பாஷ்யத்தின் கருத்தை குரு முகமாக க்ரஹித்துள்ள ஆசார்யர்களின் உபஸதநம் செய்யாமலும், ஸ்ரீகீதையின் மஹிமையை உள்ளபடி ச்லாகிப்பது என்பது ஸாத்யமில்லை என்பதே நமது நம்பிக்கை. இருந்தபோதிலும், இந்த வித்வானுடைய அபிப்ராயத்தை நாம் மிக்க ஆநந்தத்துடன் ஸ்வாகதம் செய்கிறோம். அவர் உபந்யாஸம் கிடைத்தவுடன் அதன் ஸங்க்ரஹத்தையும் நமது தீபிகையில் ப்ரகாசிப்பிக்க வேண்டுமென்பது நமது மநோரதம்.

மநுஷ்ய ஜந்மம் எடுத்திருக்கும் நமக்கு, அம்ருதத்வத்தை அடையும் உபாயமே முக்ய நோக்கமாக இருக்கவேண்டு மாதலால், அதைத் தெளிவாக உபதேசிக்கும் இந்த க்ரந்தத்தை நாம் எவ்வளவு கொண்டாடுவதும் தகும்.

“ தஸ்மிந் ஜீவதி வீரே து ஹதமப்யஹதம் பலம் ”

என்று ஜாம்பவாந் ஹநுமானைப் பற்றிச் சொன்ன ப்ரகாரம், ‘இதை ஜீவித்திருக்கும் வரையில் நம்முடைய மதத்திற்கு ஜீவிதாசை உண்டு ; அது நஷ்டமானால், நமது மதம் ஜீவித்திருந்தாலும் ஹதமே’ என்பதில் ஆக்ஷேபமில்லை.

* * *

ஸ்ரீ பாஷ்ய விமர்சந பரீக்ஷா.

ஸ்ரீமாந் அசோகநாத பட்டாசார்யர் என்னும் ஒருவர், பகவாந் ராமாநுஜனால் அநுக்ருஹீதமாயுள்ள ஸ்ரீ பாஷ்யத்தின் மீது சில தோஷாரோபணங்களைச் செய்து “ ஸ்ரீபாஷ்ய விமர்சநம்” என்னும் ஒரு நிபந்தத்தை எழுதி, அதை ‘ஸம்ஸ்க்ருத ஸாஹித்ய பரிஷத்’ என்னும் பெயருடைய ஒரு ஸம்ஸ்க்ருத பத்ரிகையில் ப்ரகாசிப்பித்திருக்கிறார். நாம் பார்த்த வரையில் அது கம்பீரமான ரீதியில் எழுதப்பட்டிருப்பதாகவாவது விஷய கௌரவமுள்ளதாகவாவது தென்படவில்லை. அத்வைத விசிஷ்டாத்வைத வேதாந்தங்கள் பரஸ்பரம் எந்த அம்சங்களில் முக்யமாக பேதிக்கின்றன வென்பதை உணர்ந்து, அப்படி பிந்நங்களான அம்சங்களின் குரு லாகவத்தை இந்த விமர்ச கர்த்தா உள் புகுந்து விசாரித்திருந்தால், அவரை ச்லாகநீயரான பூர்வபக்ஷி என்றே நாம் கொண்டாடுவோம். அப்படி ஒரு அம்சத்திலும் அவர் உட்புகவில்லை; ச்ருத்யர்த்தங்களை விசாரிப்பதில் இந்த இரண்டு வேதாந்தங்களுக்குமுள்ள வாசியையாவது, ந்யாய விசாரம் செய்வதில் தோன்றக் கூடிய குண தாரதம்யத்தையாவது, அவர் கொஞ்சமேனும் பராமர்சிக்க ப்ரவ்ருத்திக்க வில்லை. கேவலம், ஸ்ரீ பாஷ்யத்தின் ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ள மங்கள ச்லோகங்களிலும், அதற்குப் பிறகு தென்படும் ப்ரதிஜ்ஞா வாக்யத்திலும், பாஷ்யத்திற்கு உரிய லக்ஷணங்கள் அந்வயிக்க வில்லை என்று மாத்ரம் அவர் முக்யமாகப் பூர்வபக்ஷம் செய்திருக்கிறார். ஆகையால் நாம் அதை ஆதரத்திற்கு அர்ஹமாக நினைக்கவில்லை.

ஆனாலும், ஒருநால் ஸாமாந்ய ஜநங்களுட் சிலர் இதைப் பெரியதொரு பூர்வ பக்ஷமாக ப்ரமித்து விடுவார்களோ வென்று சங்கித்து, ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கர மடாதிபதியாக இருக்கும் ஜகத்குரு ஸ்ரீமத் அநந்தார்ய ஸ்வாமிகள், அதற்கு, ‘ ஸ்ரீ பாஷ்ய விமர்சந பரீக்ஷா ’ என்னும் பெயருடன் ஒரு கண்டநத்தை அநுக்ரஹித்திருக்கிறார்கள். அதில், பூர்வ பக்ஷத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களெல்லாம் நிராக்ரஹமாகவும் நிஷ்பக்ஷபாதமாகவும் பரீக்ஷிக்கப்பட்டிருப்பதுடன், தத்வார்த்தமும் விசதமாக உபபாதிக்கப்பட்டிருக்கின்றது. அதன் முடிவில், ஸ்ரீ. அசோகநாத பட்டார்யரால் செய்யப்பட்டுள்ள பூர்வ பக்ஷமும் ஸ்வீக ஸங்க்ரஹணத்தை உத்தேசித்து ஸமக்ரமாக ப்ரகாசிக்கப்பட்டிருக்கின்றது. வித்வந் மநோரஞ்ஜகமாக இருக்கும் இந்தக் கண்டநத்தை வித்வாங்களெல்லாரும் வாங்கிப் படிப்பார்களென்று நாம் நம்புகிறோம். அது காஞ்சீபுரம் ஸுதர்சந முத்ராக்ஷர சாலையில் ஆறு அணா க்ரயத்திற்கு கிடைக்குமென்று நாம் அறிகிறோம்.



இதி ப்ரஹ்மாஜ்ஞாநபக்ஷாதபி பாபீயாநயம் பேதாபேதபக்ஷ: ; அபரிமித து:கஸ்ய பாரமார்த்திகஸ்ய ஸம்ஸாரிணா அநுபூயமாநஸ்ய ப்ரஹ்மண்யேவ ஸம்பவாத் । ‘ப்ரஹ்மாம்ஸஸ்யைவாயம் ஜீவாம்ஸ:’ இதி சேத், ஸ்ருதமதோऽபி தமிதம் அதீயம் பாபம் । ஸர்வஸ்ய ஸ்வேந தாதாத்ம்யவர்ணநே ஸத்யாதயம் தோஷ: ; ஸ்வதஸ்ஸர்வஜ்ஞத்வேந ச தாதாத்ம்ய ப்ரதிபாதநே ந கஸ்சித்தோஷ: । ப்ரத்யுத நிகிலசேதந நியமநாதி கல்யாணாநாம் ப்ரதிபாதிதோ பவதி । ஸாமாநாதிகரண்யம் அபி உபபத்யதே ।

---

க்ஷியைக்காட்டிலும் இப்படி பேதாபேதம் சொல்லும் பக்ஷம் மிகக் கொடியதே. ஜீவனுக்கு ஸம்பவிக்கும் துக்கங்களோ அளவற்றவை; எல்லாம் பரமார்த்தங்கள்; அவை எல்லையற்றவை; ஆதலால் ஸம்ஸாரிகளால் ச்ரமமின்றிக்குத் தாண்டக் கூடாதவை. அப்படிப்பட்ட துக்கங்கள் ஈச்வரனுக்கு ஒரு அம்சத்தில் ப்ரஸங்கிக்கின்றன என்று சொல்வது பெருத்த பாபமே. ‘ இது எங்களுடைய கருத்தன்று; ஜீவன் என்று சொல்லப்படும் ஈச்வராம்சம் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் விலக்ஷணம் என்பதே எங்களுடைய கருத்து ’ என்னில், எங்களுடைய வழிக்கே நீங்கள் வந்தீர்கள். நாங்கள் உபபாதித்த தோஷங்களெல்லாம் ‘ ஈச்வரனே ஸ்வரூபத்தாலேயே சேதநாசேதந பதார்த்தங்களாக நிற்கிறான் ’ என்னும் அபேத பக்ஷத்தில் ப்ரஸங்கிக்குமே தவிர, ‘ ஈச்வரன் எல்லாவற்றிற்கும் அந்தராத்மா, எல்லாம் அவனுடைய சரீரம் ’ என்று வைலக்ஷண்யம் ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கமாட்டா. தோஷங்கள் ப்ரஸங்கிக்க மாட்டா என்பது மாத்ரமில்லை; ஸகல சேதந வர்க்கத்தையும் நியமிப்பது முதலிய பெரிய குண கணங்களெல்லாம் இந்தப் பக்ஷத்தில் சொல்லப்பட்டவை யாகின்றன. ஈச்வரனுக்கும் மற்றை வஸ்துக்களுக்கும் சொல்லப்படும் ஸாமாநாதிகரண்யமும் உள்ளபடி அந்வயிக்கும்.

---

நிகிலசேதந நியமநாதி:—இவ்விடத்திலுள்ள ‘ ஆதி ’ சப்தத்தால் தாரகத்வமும் சேஷித்வமும் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. ஆதேயத்வம் நியாம்யத்வம் சேஷத்வம் இவை எவ்விடத்தில் நியதமாக இருக்கின்றனவோ அது சரீரம் தாரகத்வம் நியாமகத்வம் சேஷித்வம் இவை எவ்விடத்தில் நியதமாக இருக்கின்றனவோ அது சரீரி என்பது நமது வ்யவஸ்தை.

𑌅𑌪𑌿 𑌚, 𑌏𑌕𑌸𑍍𑌯 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍋 𑌹𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌘𑌟𑌸𑍍𑌯 𑌪𑌟𑌾𑌦𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌦𑌭𑌾𑌵𑌃 ; 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌭𑌾𑌵 𑌇𑌤𑌿 । 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌲𑍇 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍇𑌶𑍇 𑌚 𑌏𑌕𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌯𑍁𑌗𑌪𑌤𑍍𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍌 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍌 । ‘𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌭𑌾𑌵𑍋 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌅𑌭𑌾𑌵𑌃’ 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌜𑌾𑌤𑍇𑌰𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍇𑌶𑍍𑌚𑌾𑌭𑍇𑌦𑍇 𑌸𑌤𑌿 𑌖𑌣𑍍𑌡𑍇 𑌮𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌦𑍍𑌭𑌾𑌵

---

*𑌅𑌪𑌿 𑌚 ............ 𑌏𑌵*—தவிரவும், வேறுபட்டும் வேறுபடாமலுமிருக்கும் தன்மைகள் பரஸ்பரம் விருத்தங்களானபடியால், அவை ஒரே வஸ்துவுக்கு ஸம்பவிக்கமாட்டா என்று கீழே சொல்லப்பட்டிருக்கிறது. குடம் வஸ்த்ரத்தைக் காட்டிலும் வேறுபட்டதானால், குடத்தில் வஸ்த்ரமில்லையென்று சொன்னதாயிற்று; வேறுபட்டதன்று என்று சொன்னால், குடத்தில் வஸ்த்ரம் இருக்கின்றது என்று சொன்னதாயிற்று. ஒரே காலத்தில் ஒரே தேசத்தில் ஒரே பதார்த்தத்திற்கு இருப்பும் இருப்பின்மையும் விருத்தமன்றோ? ‘ஜாத்யாகாரத்தால் இருப்பும், வ்யக்த்யாகாரத்தால் இருப்

---

*𑌅𑌪𑌿 𑌚*—இதுவரையில் ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் சொல்லப்படும் பேதாபேதங்கள், ச்ருதி பலத்தைக் கொண்டு தூஷிக்கப்பட்டன; இனி ஸாமாந்யமாக ஸகல வஸ்துவுக்குச் சொல்லப்படும் பேதாபேதங்கள் நிரஸிக்கப்படுகின்றன.

*𑌉𑌕𑍍𑌤𑌂*—கீழே நிர்விசேஷ வஸ்துவை நிரஸநம் செய்யும் காலத்தில், இந்தப் பேதாபேத மதம் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது [95-வது பக்கத்தைப் பார்க்க]. ஆனால் அவ்விடத்தில், அப்படி ஒரே வஸ்து பிந்நமாகவும் அபிந்நமாகவும் இருப்பது ஸாத்யமில்லை என்பதை ஸித்தமாக வைத்துக்கொண்டு அஸம்பவம் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் அது உபபாதிக்கப்படுகின்றது.

*𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾*—ஆகார பேதத்தால் அவிரோதத்தைச் சங்கிக்கிறார். ஜாதி என்றும் வ்யக்தி என்றும் இரண்டு உண்டு. குதிரை மாடு முதலியவைகளெல்லாம் ம்ருகங்களாகையால், ம்ருகத்வத்தை ஜாதியென்றும் அதற்குட்பட்டிருக்கும் குதிரை மாடு முதலியவைகளை வ்யக்திகளென்றும் சொல்வார்கள். குதிரை மாடு இரண்டையும் ம்ருகங்களாக மாத்ரம் கவனிக்கும் பொழுது அவைகளுக்கு அபேதம் தோற்றும் என்பதும், அவைகளை வ்யக்திகளாகக் கவனிக்கும் பொழுது பேதம் தோற்றும் என்பதும் இவ்விடத்திற் செய்யப்படும் சங்கை.

*𑌜𑌾𑌤𑍇𑌰𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍇𑌃*—இந்தச் சங்கைக்கு ஸமாதாநத்தை மூன்று கோடிகளாகப் பிரித்துச் சொல்லுகிறார். ஜாதியும் வ்யக்தியும் ஒன்றா? வெவ்வேறா? இல்லாவிட்டால் ஒன்றாகவும் வெவ்வேறாகவும் இருக்கின்றனவா? என்பது பிரிவு.



𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃, 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑍇 𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑍇 𑌚 𑌅𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 𑌅𑌶𑍍𑌵𑍇 𑌮𑌹𑌿𑌷𑌤𑍍𑌵𑌵𑌦𑍇𑌵𑍇𑌤𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑍋 𑌦𑍁𑌷𑍍𑌪𑌰𑌿𑌹𑌰 𑌏𑌵 ।

𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃 𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌤𑌯𑌾 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌿𑌣𑍋𑌶𑍍𑌚 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌤𑍍𑌵𑌂, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑌰𑍍𑌹𑌤𑍍𑌵𑌂,

---

பின்மையும் ஸம்பவிக்கக்கூடும்’ என்னில், ஜாதியும் வ்யக்தியும் அபிந்நங்கள் என்று சொல்லும் பக்ஷத்தில் கண்டமாயிருக்கும் ஒரு வ்யக்தியும் முண்டமாயிருக்கும் ஒரு வ்யக்தியும் தங்களுடைய ஜாதியைக் காட்டிலும் தாம் அபிந்நங்களாகுமாகையால் கண்ட வ்யக்திக்கு முண்டத்தன்மை ப்ரஸங்கிக்குமன்றோ? ‘ஜாதிக்கும் வ்யக்திக்கும் பேதம் அபேதம் இரண்டுமுண்டு’ என்று சொன்னால், அபேதம் சொல்லும் பொழுது அஸத்பாவமும், பேதம் சொல்லும் பொழுது ஸத்பாவமும் ப்ரஸங்கிக்கும். குதிரையில் எருமை மாட்டுத் தன்மை சொல்வது போல இந்த விரோதம் பரிஹரிக்கக் கூடாததே.’

*𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃 ............ 𑌭𑍇𑌦𑌵𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌭𑍇𑌦𑌤𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍*—ஜாதி முதலானவை வஸ்துக்களுடைய அமைப்பு; ஆனபடியால், அவை வஸ்துக்களுக்கு ப்ரகாரங்க

---

ஜாதியும் வ்யக்தியும் ஒன்றே என்னும் முதல் பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கும் தோஷமாவது:—‘கண்ட பசு (கொம்பு ஒடிந்த மாடு) முண்ட பசு (கொம்பில்லாத மாடு) இவை இரண்டும் வ்யக்திகள்; இவைகளின் ஜாதி கோத்வம் (மாட்டுத் தன்மை). இந்த ஜாதிக்கும் அந்த வ்யக்திகளுக்கும் பேதமில்லையென்றால், அந்த இரண்டு வ்யக்திகளுக்கும் பரஸ்பரம் பேதமில்லையென்று ஏற்படும். கொம்பு ஒடிந்த மாட்டுக்கும் கொம்பில்லாத மாட்டுக்கும் பேதமில்லையென்று சொல்வது துஷ்டமன்றோ?’

ஜாதியும் வ்யக்தியும் வேறு என்னும் இரண்டாவது பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கும் தோஷமாவது:—நீங்கள் இரண்டு வ்யக்திகளுக்குப் பரஸ்பரம் ஜாத்யாகாரத்தால் அபேதத்தையும் வ்யக்த்யாகாரத்தால் பேதத்தையும் ஒத்துக் கொள்ளுகிறபடியால், கண்ட பசுவுக்கு முண்ட பசுவைக் காட்டிலும் பேதத்தையும் அபேதத்தையும் ஒத்துக்கொள்ளும்படி நேரும். அப்படி ஒரே வஸ்துவுக்குப் பரஸ்பர விருத்தங்களான இரண்டு ஆகாரங்கள் ஏக காலத்தில் நேர்கின்றன என்று சொல்வதும் தோஷ துஷ்டமே?. (இந்தத் தூஷணம் மூலத்தில் சொல்லப்படவில்லை.)

ஜாதியும் வ்யக்தியும் பிந்நாபிந்நங்கள் என்னும் மூன்றாவது பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கும் தோஷமாவது:—அவை பிந்நங்கள் என்று சொல்லுகிறபடியால் கண்ட பசுவுக்கு ஜாதி ரூபத்வமில்லையென்றும், அவை அபிந்நங்களென்றும் சொல்லுகிறபடியால் அந்தக் கண்ட பசுவுக்கே ஜாதி ரூபத்வம் உண்டென்றும், இப்படி ஒரே காலத்தில் ஒரே வஸ்துவினிடத்தில் ஜாதியின் பாவம் அபாவம் இரண்டும் உண்டு என்று சொல்லும்படி நேரும். அப்படிச் சொல்வதும் தோஷமே.

*𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃*—இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள், ஏற்கெனவே, நிர்விகல்பக ப்ரத்யக்ஷத்திற்கு நிர்விசேஷ விஷயத்வத்தைச் சங்கித்துக்கொண்டு

[illegible], தஸ்ய ச ஸம்ஸ்தானஸ்ய அநேகவஸ்துநிஷ்ட ப்ரகாரதயாऽவஸ்திதி ப்ருதக்ஸித்த்யாதி ஸர்வம் பூர்வமேவோக்தம் । 'ஸோऽயம்' இதி புத்தி: ப்ரகாரைக்யாத் 'அயமபி முண்டீ' இதி புத்திவத் । அதஏவ ச ஜாத்யாதி: ப்ரகாரோ வஸ்துனோ பேத இத்யுச்யதே ; தஸ்யைவ ஹி வஸ்துனோ பின்னமிதி வ்யவஹாரஹேதுத்வாத் । ஸ ச வஸ்துனோ பேதவ்யவஹாரஹேது: ஸ்வயம் ச, ஸம்வேதநவத் । யதா ஸம்வேதநம்

---

ளாகின்றன. அப்படி அவை ப்ரகாரங்களாகிறபடியால், ப்ரகாரம் ப்ரகாரி இவை இரண்டும் வெவ்வேறு என்பதும், ப்ரகாரம் ப்ரகாரியை விட்டுத் தனித்து நிற்க அயோக்யமென்பதும், அது தனித்து க்ரஹிக்கக்கூடாதது என்பதும், அந்த அமைப்பு பல வஸ்துக்களிடத்தில் ப்ரகாரமாக நிற்கின்றது என்பதும், இவையெல்லாம் முன்னமேயே விவரிக்கப்பட்டிருக்கின்றன. 'இப்பொழுது நான் பார்க்கும் வஸ்து முன் என்னால் பார்க்கப்பட்ட வஸ்துவின் ஜாதியைச் சேர்ந்ததே' என்று நமக்கு ஜ்ஞாநம் ஜநிப்பதெல்லாம் அவையிரண்டும் துல்யமான ப்ரகாரத்தை உடைத்தாயிருப்பதாலேயே; முன் ஒரு கொம்பைக் கையில் கொண்டிருப்பவனைப் பார்த்து விட்டு, பிறகு அம்மாதிரி மற்றொருவனைப் பார்த்தால், 'இவனும் தண்டீ (கொம்பைக் கையில் கொண்டவன்) என்னும் ஜ்ஞாநம் நமக்கு ஜநிப்பதைப் போன்றதே இந்த ஜ்ஞாநமும். இந்த ஜாதி முதலான ப்ரகாரமே வஸ்துவின் பேதமென்று சொல்லப்படுகின்றது. அதாவது, அது அந்த வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்டது என்று வ்யவஹரிப்பதற்கு, அந்த வஸ்துவுடன் அது ஸம்பந்தப்பட்டிருப்பதே காரணம் என்று சொன்னதாயிற்று. அப்படி அது வ்யவஹார காரணமாக இருப்பதும் வேறு ஒரு காரணத்தாலும் ஏற்படவில்லை. எப்படியானால் ஒரு வஸ்துவை அறிவதானது அந்த வஸ்துவின் வ்யவஹாரத்திற்குக் காரணமாக இருந்துகொண்டு

---

அதற்கு ஸமாதாநம் சொல்லும்பொழுது, விஸ்தாரமாக உபபாதிக்கப்பட்டிருக்கின்றன. (95-98-ம் பக்கங்களைப் பார்க்க.)

ப்ரகாரைக்யாத்—ப்ரகாரம் ஒன்றாக இருக்கிறபடியால். அதாவது—துல்யமான ப்ரகாரத்தை உடைத்தாயிருக்கிறபடியால் என்பது கருத்து.

ஸ ச ஸ்வயம்—வ்யக்திகளின் விஷயபேத வ்யவஹாரத்திற்கு ஜாதியோகம் அபேக்ஷிக்கப்படுவதுபோல, ஜாதியின் விஷயபேத வ்யவஹாரத்திற்கு வேறு ஹேது



வஸ்துனோ வ்யவஹாரஹேது: ஸ்வஸ்ய வ்யவஹாரஹேதுஶ்ச பவதி । அத ஏவ ச 'ஸன்மாத்ரக்ராஹி ப்ரத்யக்ஷம் ந பேதக்ராஹி' இத்யாதி வாதா நிரஸ்தா: ; ஜாத்யாதிஸம்ஸ்தானஸம்ஸ்திதஸ்யைவ வஸ்துன: ப்ரத்யக்ஷேண க்ருஹீதத்வாத், தஸ்யைவ ஸம்ஸ்தானரூபஜாத்யாதே: ப்ரதியோக்யபேக்ஷயா பேதவ்யவஹாரஹேதுத்வாத் । ஸ்வரூபபரிணாமதோஷஶ்ச பூர்வமேவோக்த: ।

॥ இதி பாஸ்கரபக்ஷநிராஸ: ஸமாப்த: ॥

---

தன்னுடைய வ்யவஹாரத்திற்கும் காரணமாகின்றதோ, அப்படியே இந்த ஜாதி முதலிய ப்ரகாரமும் மற்றை வஸ்துக்களின் வ்யவஹாரத்திற்குக் காரணமாக இருந்து கொண்டு தன்னுடைய வ்யவஹாரத்திற்கும் காரணமாகின்றது. இம்மாதிரியான யுக்திகளை ஆதாரமாகக் கொண்டே நாம், 'ப்ரத்யக்ஷம் என்னும் ப்ரமாணம் எவ்வித பேதத்தையும் க்ரஹிப்பியாமலே கேவலம் வஸ்துவின் இருப்பை மாத்ரம் க்ரஹிப்பிக்கக் கூடும்' என்பதைப் போன்ற வாதங்களை நிரஸநம் செய்கிறோம். ப்ரத்யக்ஷம் என்னும் ப்ரமாணம் ஜாதி முதலிய அமைப்புடன் கூடிய வஸ்துவையே காட்டுகிறதன்றோ ? அந்த அமைப்பு ரூபமாகிற ஜாதி முதலியதும் ப்ரதியோகியைத் தோற்றுவித்துக் கொண்டு வஸ்துவின் பேத வ்யவஹாரத்திற்கும் ஹேதுவாகவும் ஆகிறதன்றோ ?

ஸ்வரூப.........உக்த:—ப்ரஹ்ம ஸ்வரூபமே அசேதந வஸ்துக்களாகப் பரிணமிக்கின்றது என்று சொல்வதும் தோஷ துஷ்டம் என்பதும் பாஸ்கர மதத்தை நிரஸநம் செய்யுமிடத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

(பாபக்ஷநிராஸம் முற்றிற்று.)।

---

அபேக்ஷிதமோ? என்று ஒரு சங்கை செய்துகொண்டு, 'அப்படி வேறு ஹேது அபேக்ஷிதமில்லை; ஏனென்றால்,ஜாதி முதலியன ஸம்வேதநம் போல ஸ்வபர நிர்வாஹகங்கள்' என்று ஸமாதாநம் சொல்லுகிறார்.

ஸ்வரூபபரிணாமதோஷஸ்ய—இதுவரையில், 'ஜீவ ஸ்வஸ்ரூபமும் ப்ரஹ்ம ஸ்வரூபமும் ஒன்றே'என்று சொல்வதால் ஸம்பவிக்கும் ச்ருதி விரோதம் உபபாதிக்கப்பட்டது. இப்பொழுது 'ஸ்வரூப' என்னும் வாக்யத்தால் 'அசேதந வஸ்து ஸ்வரூபமும் ப்ரஹ்ம ஸ்வரூபமும் ஒன்று' என்று சொல்வதால் ஏற்படும் தோஷம் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ:

॥ அத ஸ்வ பக்ஷ ஸ்தாபந விஸ்தார: ॥

"யஃ வுரயிவுூாம் திஷ்டு வுரயிவுூா அஷரொ யம் வுரயிவீ ந வெத யஸ்ய வுரயிவீ ஶரீரம் யஃ வுரயிவீமஷரொ யமயதி, ஸஷ த ஞூத்மா அய்யாமுூஹம்ருதஃ" ('வுரஹதாரண்ய காண்வபாடஃ')

"ய ஞூத்மநி திஷ்ஞாத்மநொடஷரொ யமாத்மா ந வெத யஸ்யாத்மா ஶரீரம் ய ஞூத்மாநமஷரொ யமயதி, ஸ த ஞூத்மாஅய்யாமுூஹம்ருதஃ" (வுரஹதாரண்ய மாய்யம்திநபாடஃ)

---

ஸ்ரீ:

## ஸ்வபக்ஷ ஸ்தாபநத்தின் விஸ்தாரம்.

யஃவுரயிவுூாம்............அஹியீபதெ—"எவன் ப்ருதிவியில் இருந்து கொண்டு, அதன் உள் புகுந்தவனும் அதனால் அறியப்படாதவனும் அதைச் சரீரமாக உடையவனும் அதன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி லக்ஷணமான நியமநங்களைச் செய்கிறானோ, அவன் உனக்கு அந்தர்யாமி; அவனே அந்த ப்ருதிவீ கதங்களான தோஷங்கள் ஸ்பர்சிக்கமாட்டா"

"எவன் ஆத்மாவினிடத்தில் இருந்துகொண்டு, அதன் உள்புகுந்தவனும் அதனால் அறியப்படாதவனும் அதைச் சரீரமாக உடையவனும் அதன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி லக்ஷணமான நியமநங்களைச் செய்கிறானோ, அவன் உனக்கு அந்தர்யாமி; அவனே அந்த ஆத்ம கதங்களான தோஷங்கள் ஸ்பர்சிக்கமாட்டா"

---

க்ரந்தாரம்பத்தில் மங்கள ரூபமாகச் செய்யப்பட்டுள்ள 'வரம் ஸுமெஹ வரஜூழ்' இத்யாதியான இரண்டாவது ச்லோகத்தில் தாம் ப்ரஸ்தாவித்திருந்த பர பக்ஷ நிராஸத்தை இது வரையில் விஸ்தரித்துச் சொன்னார். இனி 'அஶெஷ திதிக' இத்யாதியான முதல் ச்லோகத்தில் ப்ரஸ்தாவித்திருக்கும் ஸ்வ பக்ஷ ஸ்தாபநத்தை விவரிக்க ஆரம்பிக்கிறார்.

யஃ வுரயிவுூாழ—முதலில் 'தத்த்வமஸி' முதலான அபேத ச்ருதி வாக்யங்களில் சொல்லப்பட்டுள்ள ஸாமாநாதிகரண்யத்திற்கு, பேத ச்ருதி வாக்யங்



"யஃ வுரயிவீமஷரெ ஸஂசரந் யஸ்ய வுரயிவீ ஶரீரம் யம் வுரயிவீ ந வெத" இத்யாதி, "யொடக்ஷரமஷரெ ஸஂசரந் யஸ்யாக்ஷரம் ஶரீரம் யமக்ஷரம் ந வெத", 'யொ ம்ருத்யுமஷரெ ஸஂசரந் யஸ்ய ம்ருத்யுஃ ஶரீரம் யம் ம்ருத்யு ந வெத, ஸஷ ஸவ்வுூதாந்தராத்மாடவஹதவாப்மா திவ்யொ தெவ ஏகொ நாராயணஃ" (ஸுபாலொவநிஷத்)

---

"எவன் ப்ருதிவியின் உள்ளில் ஸஞ்சரித்துக்கொண்டு அதைச் சரீரமாக உடையவனும் அதனால் அறியப்படாதவனும்" என்பது முதலானவும்,

"எவன் அக்ஷரமென்று சொல்லப்படும் ஆத்மாவின் உள்ளில் ஸஞ்சரித்துக் கொண்டு அதைச் சரீரமாக உடையவனும், அதனால் அறியப்படாதவனும்," "எவன் ம்ருத்யுவின் உள்ளில் ஸஞ்சரித்துக்கொண்டு அதைச் சரீரமாக உடையவனும் அதனால் அறியப்படாதவனும் இருக்கிறானோ, அவன் ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மா; அவனே அவ்வவைகளின் தோஷங்கள் ஸ்பர்சிக்க மாட்டா; அவன் அத்விதீயனான பகவானாகிற நாராயணனே."

---

களுக்கும் கடக ச்ருதி வாக்யங்களுக்கும் விரோதம் வராமல் அர்த்தம் சொல்லக் கோலி, அப்படி அர்த்தம் சொல்வதற்கு உபயோகமாக இருக்கும் கடக ச்ருதி வாக்யங்களிற் சிலவற்றையும் பேத ச்ருதி வாக்யங்களிற் சிலவற்றையும் இவ்விடத்தில் உதாஹரிக்கிறார். ப்ரஹ்மமும் சேதநாசேதந வஸ்துக்களும் ஒன்றே என்று சொல்லும் வாக்யங்களை அபேத ச்ருதிகளென்றும், அவை யிரண்டும் வெவ்வேறு என்று சொல்லும் வாக்யங்களைப் பேத ச்ருதிகளென்றும், ப்ரஹ்மம் ஜீவனுக்கும் அசேதந வஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருக்கின்றது என்று சொல்லும் வாக்யங்களைக் கடக ச்ருதிகளென்றும் வ்யவஹரிப்பது வழக்கம். இவ்விடத்தில் உதாஹரிக்கப்பட்டுள்ள வாக்யங்களுள் "யஃ வுரயிவுூாம்" என்பது முதல் "அமெந ஜீவெநாத்மநா" என்பது வரையிலுள்ள வாக்யங்கள் கடக ச்ருதி வாக்யங்கள். அதற்குப் பிறகு வரும் வாக்யங்களெல்லாம் பேத ச்ருதி வாக்யங்கள்.

"யஃ வுரயிவுூாம்" என்பதால் ப்ரஹ்மம் அசேதநத்திற்கு அந்தர்யாமியாக இருக்கின்றது என்பதும், 'ய ஞூத்மநி' என்பதால் ப்ரஹ்மம் சேதநத்திற்கு அந்தர்யாமியாக இருக்கின்றது என்பதும் சொல்லப்படுகின்றன. 'யஃ வுரயிவீம்' என்பதால் அப்படி அந்தர்யாமியாக இருக்கும் ப்ரஹ்மம் நாராயணன் என்று சொல்லப்படும் தேவதையே என்பது விளக்கப்படுகிறது.

# உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

## நகை வர்த்தகர்கள்.







தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

காட்சி அறை.

25, சைனாபஜார் ரோட், மதராஸ்.

## நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து சொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.



"த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" (முண்டகோபநிஷத்)

"அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா," "தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத், ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்" இத்யாதி, "ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமபவத்" (தைத்திரீயோபநிஷத்)

---

"ஸமாநங்களான குணங்களுடன் கூடினவைகளாகவும், பரஸ்பரம் ஸமாநங்களாகவும் இருக்கும் இரண்டு பக்ஷிகள் ஒரே வ்ருக்ஷத்தை அடைந்திருக்கின்றன; அவைகளுள் ஒன்று பக்வமான பலங்களைப் புஜிக்கின்றது, மற்றொன்று அந்தப் பலங்களைப் புஜிக்காமலே ப்ரகாசிக்கின்றது."

"ஸகல ஜநங்களின் உள்ளிலும் அவன் ப்ரவேசித்திருக்கிறான்; அவன் அவர்களை நியமிக்கிறான்; அவன் அந்தர்யாமியாக இருந்துகொண்டு எல்லாருக்கும் ஆத்மாவாகிறான்."

"அதை ஸ்ருஷ்டித்தான்; அதன் உள்ளில் அநுப்ரவேசித்தான். அதை அநுப்ரவேசித்து, அவனே நிர்விகாரனும் எப்பொழுதும் ஒரே ரூபத்துடன் கூடியவனும் இருக்கும் சேதநனைவும், விகாராஸ்பதமான அசேதநமாகவும் ஆனான்," என்பது முதலானவும்,

---

"நிரஞ்ஜந:," "அபஹதபாப்மா" என்னும் சப்தங்கள், அந்த ப்ரஹ்மம் அப்படி அந்தர்யாமியாக இருக்கையிலும் அந்தந்த வஸ்துக்களின் ஹேய குணங்களால் எவ்வித மாறுதலையும் அடையாமல் அது நிர்மலமாகவே இருக்கின்றது என்பதைக் குறிக்கின்றன.

"த்வா ஸுபர்ணா" இத்யாதியான வாக்யம் பேத ச்ருதியாக இருக்கையிலும், இவ்விடத்தில் இது அந்த அர்த்தத்தை விளக்குவதற்காக உதாஹரிக்கப்படவில்லை; ஏனென்றால் பேத ச்ருதிகள் பின்னடி உதாஹரிக்கப்படுகின்றன. ஆனால் 'அந்த ப்ரஹ்மம் அந்தர்யாமியாக இருக்கையிலும் அது நிர்விகாரமாக இருக்கின்றது' என்பதை விளக்குவதற்காகவே அது உதாஹரிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய வேண்டும். இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டுள்ள இரண்டு பக்ஷிகளும் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும், மரமானது சரீரத்தையும், பழமானது கர்ம பலத்தையும் குறிக்கின்றன. பழத்தின் போஜநம் என்பதால் கர்ம பலாநுபவம் சொல்லப்படுகின்றது. 'பரமாத்மா அந்தப் பழங்களைப் புஜிக்காமல் ப்ரகாசிக்கின்றது' என்பதன் பொருள், 'அந்தச் சரீரத்திலேயே தானும் இருக்கையிலும் [illegible] பல [illegible] ன்று' என்பதுதான்.

86788

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

# அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.




| | |
|---|---|
| தலைவலி | இருமல் |
| நரம்புவலி | ஜலதோஷம் |
| முதுகுவலி | நெருப்புக்காயம் |
| இடுப்புவலி | காயங்கள் |
| கீல்வாயுவு | சுளுக்குகள் |

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

## அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய். மதராஸ்.


இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.